பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 19 வியாழக்கிழமை 02.05.2024 கதிர் 176

# 13ஆம் திருத்தத்தை அப்படியே அமுல்படுத்த முழு நடவடிக்கை

## சஜித் உறுதிமொழி

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்த எமது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவித்தார். கொழும்புபுறக்கோட்டையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை மாதிரி என்று சொல்வார்கள். அதுபோன்றாகிவிட்டது தமிழ் அரசுக் கட்சியின் மே நாள் நிகழ்வுகளில் ஒன்று. அதென்ன நிகழ்வுகளில் ஒன்று என்று கேட்கிறீர்களா? தமிழ் அரசுக் கட்சியில் இம்முறை இரண்டு மே தினங்கள் வடக்கில் கிளிநொச்சியில் ஒரு நிகழ்வு. அதை ஏற்பாடு செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். அந்தக் கூட்டம் 'தமிழ்த் தேசிய மே நாள்' என்று அறிவிக்கப்பட்டது. ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மானிப்பாய் மண்டபத்தில் அவசர அவசரமாக ஒழுங்கு செய்து நடத்திய மே நாள் கூட்டத்திற்கும் 'தமிழ்த் தேசிய மேநாள்' என்றுதான் பெயரிடப்பட்டிருந்தது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மே தின நிகழ்விற்கு 'விழிப்படைவார் தொழிலாளர் விடியும்தேசம்' பெயரிடப்பட்டிருந்தது. அங்கு தமிழ்த் தேசிய மே நாள் ஏன் இல்லாமல் போனது என்று தெரியவில்லை. அந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

இந்த இரு கூட்டங்களிலு- ☞ 2

## மக்கள் தீர்ப்பைப் பெறவே தமிழ்ப் பொது வேட்பாளர்

### கிளிநொச்சி கூட்டத்தில் இப்படி விளக்கமளித்தார் விக்கினேஸ்வரன்

வடக்கு, கிழக்கில் உள்ள எமது நிலையை எமது மக்களுக்கும் மற்றையோருக்கும் தெளிவுபடுத்தவும் மக்கள் தீர்ப்பு ஒன்றைப் பெறுவதற்கு ஆவனசெய்யவதற்காகவே தமிழ்ப் பேசும் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமானசி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தமிழ்த் தேசிய மே தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பேசும் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று சொல்லிவருகின்றோம். அதெப்படி என்று நீங்கள் கேட்கக்கூடும். ☞ 10

## ஏற்பட்ட பொருளாதாரப் பேரழிவை சலுகைகள் மூலம் தீர்க்க முடியாது

### குமார் குணரட்ணம் கடும் விமர்சனம்

பொருளாதாரப் பேரழிவை 'அஸ்வெசும' மற்றும் பெருந்தோட்டத் தொழிளாலர்களின் சம்பள உயர்வு போன்ற சிறிய சலுகைகள் மூலம் தீர்க்க முடியாது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்தார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் மேதினப் பேரணி கொழும்பு மாளிகாகந்த வைட் பார்க்கில் ஆரம்பித்து ஹைட்பார்க் மைதானத்தில் நிறைவடைந்ததோடு பொதுக் கூட்டமும் அங்கு நடைபெற்றது.

'உழைக்கும் மக்களே, ஐ.எம்.எப். பொறியையும் இந்திய காலனித்துவத்தையும் தோற்கடிப்போம்' என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த மே தினக் கூட்டத்தில் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம், விவசாயப் போராட்ட இயக்கம், சுதந்திரத்திற்கான பெண்கள் இயக்கம், மாற்றத்துக்கான ☞ 10

## இந்தியாவின் மௌனம் குறித்து தமிழ் அரசுக் கட்சி வேதனை

### மே தினப் பிரகடனத்தில் வெளிப்படுத்தியது

**தமிழர்களின் நிர்மூல மான சூழ்நிலையில் அயலக இந்தியாவும், அனைத்துலக நாடுகளும் தமது மனச்சாட்சிக் கதவுகளை இறுகமூடி அமைதி கொள்வது ஈழத்தமிழர்களை ஆழமான வேதனைக்கு இட்டுச் சென்றுள்ளதாக இலங்கைத் தமிழ் அசுக் கட்சியின் மே தினப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கிளிநொச்சி மாவட்ட தொழிற் சங்கங்களின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மே தின நாள் நேற்றையதினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்டுள்ள பிரகடனத்திலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

**நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,**

**இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ்த் தேசிய இனம் என்ற வகையில்,** ☞ 9

### இனி மலையக மக்கள் குடியேற வரமாட்டார்கள்

## வடக்கு கிழக்கில் தமிழர் சனத்தொகை குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்

### மனோ கணேசன் கிளிநொச்சியில் இடித்துரைப்பு

வடக்கிலும் கிழக்கிலும்தமிழர்சனத்தொகை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இனி மலையகத்தில் இருந்து தமிழர்கள் இங்கு வந்து குடியேறமாட்டார்கள் என்று தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தமிழ்த் தேசியமேதினநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, வடகிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகளிடம் 13ஐ முழுமையாக அமுல் செய்வேன் என்று என் முன்னிலையில் கூறினார். அதை ☞ 9

## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளம் 1,700 ரூபாயாக அதிகரிக்கப்படும்

### ஜனாதிபதி நேற்று உறுதியளிப்பு



பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஒருபோதும் மறக்கவில்லை, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ☞ 8

## தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தை மக்கள் மன்றத்திடம் கையளிக்கிறேன்

### மே தினத்தில் சிறீதரன் அறிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், அதன் எதிர்காலத் தலைமைத்துவத்தையும் மக்கள் மன்றத்தின் முன் கையளித்து, தமிழ்த் தேசிய மே நாளன்று புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல்பயணத்தைதொடங்குகிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர்சிவஞானம்சிறீதரன் வெளிப்படுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 38 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்போடும், ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பங்கேற்போடும் தமிழ்த் தேசிய மேநாள் என்றபெயரோடு இடம்பெற்ற உலகத் தொழிலாளர் நாள் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

கட்சியின் ☞ 2

## தமிழ் அரசுக் கட்சியின் மே தினங்கள் இரு இடங்களில் இருவேறு பொருளில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மே தினம் இருவேறு இடங்களில் இருவேறு நிலைப்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைவில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாணம் தழுவிய தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வு இடம்பெற்றது. நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து மே தினப் பேரணியுடன் ஆரம்பித்து, கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை அடைந்ததும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளர் சீனியன் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த மே நாள் நிகழ்வில், சிறப்பு உரையாளராக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ☞ 2

## ரூ. 1700 சம்பளத்தைப் பெறுவதான உறுதிமொழியை நிறைவேற்றினோம்

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700 சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்போம் என்று வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றியுள்ளோம் என்று இலங்கை தொழிலாளர் ☞ 9

## தமிழர்கள் சமஷ்டியை அடைய இந்தியாவும் உதவ வேண்டும்

### முன்னணியின் மே நாள் பிரகடனம் கோருகிறது

தமிழர்கள் 'சமஸ்டி' அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் கோருகின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் ☞ 9

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்துகொள்ளவில்லை. வழக்கமாக மே தினக் கூட்டங்களில் அவர் முன்னணியில் கலந்துகொள்வார். நீண்ட உரையும் ஆற்றுவார். ஆனால் இந்தத் தடவை இரு இடங்களிலும் அவர் இல்லை. மே தினத்திற்குத் தனது சார்பில் ஒரு வாழ்த்துச் செய்தியை ஊடகங்களுக்கு அனுப்பியதோடு அமைதியாகிவிட்டார். கிளிநொச்சிக் கூட்டத்திற்கு அவருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. மட்டக்களப்புக் கூட்டத்திற்கும் அவர் ஏன் செல்லவில்லை என்பது தெரியவில்லை.

இதற்கிடையில், கிளிநொச்சிக் கூட்டத்தில் மற்றொரு சுவாரஸியமான சம்பவமும் நடந்திருக்கிறது. அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரனும் மனோ கணேசனும் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் எதிரும் புதிருமான கருத்துக்களைத் தெரிவித்தனர். அதுமட்டுமல்ல பொது வேட்பாளர் விடயத்தில் தெற்குத் தமிழர்களின் ஆதரவு கிடைக்காது என்பதையும் மனோ கணேசன் அங்கு தெளிவுபடுத்திவிட்டார்.

தந்தை செல்வாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்திருந்துவிட்டுப் பின்னர் வெளியேறியபோது தொண்டமான் என்ன சொன்னாரோ அதுபோன்றே, மனோ கணேசனும் தங்களுடைய அரசியல் தளம் வேறு, வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தளம் வேறு என்று பட்டென்று போட்டு உடைத்துவிட்டுப் போய்விட்டார்.

''ஜனாதிபதி தேர்தலை பொதுவாக்கெடுப்பாக கருதி வடக்கு கிழக்கில் பொது வேட்பாளரை நிறுத்த தமிழ்க்கட்சிகளுக்கு உரிமை உண்டு. ஆனால் கடைசி நேரத்தில், ஒரு பெரும்பான்மை வேட்பாளருக்கு 2ஆம் விருப்பு வாக்கை வழங்க முடியும் என்று விக்கினேஸ்வரன் தனது உரையில் கூறியுள்ளார். அந்தக் கூற்றானது சந்தேகங்களை ஏற்படுத்துவதோடு பொது வேட்பாளர் கோசத்தை மலினப்படுத்துகிறது. ஆனால் பொது வேட்பாளர் விடயத்தில் தென்னிலங்கை தமிழர்களை சேர்க்காதீர்கள். அது வேறு தளம். வடக்கு, கிழக்கு இது வேறு தளம் என்பதுதான் எனது நிலைப்பாடாகும்.'' என்றார் அவர்.

மேடையில் அமர்ந்திருந்த தலைவர்கள் அதனை அமைதியாகக் கேட்க வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆக மொத்தத்தில் பொது வேட்பாளர் விடயத்தில் தெற்கின் தமிழ் வாக்குகள் கிடைக்கப்போவதில்லை, அல்லது அப்படிக் கிடைக்கும் என்று கடைசி வரைக்கும் ஏமாற்றிக் காரியத்தை எடுத்துச் செல்ல முடியாது என்பது தெளிவாகிவிட்டது. இனிமேல் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் விருப்பை வெளிப்படுத்துவதற்கான தமிழ்ப்பொது வேட்பாளர் என்றுதான் சொல்லவேண்டும்.

மனோ கணேசனே நிராகரித்துவிட்ட பிறகு தெற்கில் தமிழர்களின் அரசியலைக் கட்டுப்படுத்தக்கூடிய இ.தொ.கா. பொது வேட்பாளரை ஆதரிக்கும் என்று கனவிலும் நினைக்க முடியாது. எனவே வடக்கு கிழக்கில், ஈபிடிபி ஆதரவாளர்கள், அங்கஜன் ஆதரவாளர்கள், மற்றும் வேறு பல உதிரிக் கட்சி ஆதரவாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் வாக்களிக்கவே செல்லாமல் இருப்போர் என்று ஒவ்வொரு அரசியல் தரப்பின் ஆதரவாளர்களையும் தவிர்த்துவிட்டு எஞ்சியிருக்கும் தமிழர்களின் விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கான தமிழ்பொது வேட்பாளர் என்கிற வகையில்தான் இனிவரும் காலங்களில் இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லவேண்டியிருக்கும்.

தனிநபர்கள் சிலரும் பொது அமைப்புக்கள் சிலவும் வவுனியாவில் கூடி தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக ஒரு முடிவை எடுத்த ஒரு நாளுக்குள் அந்தப் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கு தமிழ் பொது வேட்பாளர் என்று சுருங்கிப் போனமை இந்த முயற்சிக்கான பெரும் சவால்தான்.

தமிழ்த் தேசிய மே நாளன்று புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல் பயணத்தை தொடங்குகிறேன் என்று பிரகடனப்படுத்தியிருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரனும் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலையில் இது விடயத்தில் அவரால் ஏதும் மாற்றங்கள் ஏற்படுமோ என்று பொறுத்திருந்து பார்க்கலாம். ஏனெனில் மனோ கணேசனை கிளிநொச்சிக்கு அழைத்து பொது வேட்பாளர் விடயத்தில் தெற்குத் தமிழர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது என்று தெளிவுபடுத்தியிருப்பவர் அவர்தானே! அதனால் தமிழ் பொது வேட்பாளர் உத்தியை வெற்றிபெறச் செய்யக்கூடிய மாற்று ஏற்பாடுகள் ஏதும் அவரிடம் இருக்கக்கூடும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 13ஆம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே தினக் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் குணசிங்க புரத்தில் ஒன்றிணைந்ததோடு பேரணியாக புறக்கோட்டை வளாகத்தைச் சென்றடைந்தனர். குறித்த கூட்டத்தில் தலதா அத்துக்கோரள, சரத்பொன்சேகா, மற்றும் ராஜித சேனாரத்ன உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருத்தப்பட்ட மக்கள் சார்பான சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் எமது ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

அத்துடன் சிறுவர், மகளிர் உரிமைக்கான ஜனாதிபதி செயலணி, இளைஞர் ஜனாதிபதி செயலணி, சுயாதீன ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு எமது ஆட்சியில் நிறுவப்படும்

நான் ஏனைய அரசியல் வாதிகளைப் போன்று வாக்குறுதிகளை மீறவில்லை எனவும், இந்த நாட்டின் 76 வருடகால ஜனநாயக வரலாற்றில் எதிர்க்கட்சியினால் செய்யப்படாத சேவையை எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்கு செய்துள்ளதாகவும், அதனால் நான் அளித்த வாக்குறுதிகளில் பாதிக்கு மேல் எதிர்க்கட்சியில் இருந்தே செய்ய முடிந்துள்ளது.

மேலும், 76 வருட வரலாற்றைப் பற்றி பேசும் இந்நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணம் குறித்து அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். 76 ஆண்டுகளில் இந்நாட்டின் எந்த அரசியல் தலைவர்களும் எந்த பதவியும் அதிகாரமும் இல்லாமல் எந்த பணியையும் செய்யவில்லை.

ஆனால் எந்த ஒரு அரசியல் கட்சியும் செய்யாத சேவையை, ஜனநாயக வரலாற்றில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளதாலயே அது இலங்கையின் முதன்மைக் கட்சி 'ஐக்கியமான நாடு சுபிட்சமான எதிர்காலம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு, செத்தம் வீதியில் நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான மே தின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை அழித்தவர்களுடன் தமக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை அவ்வாறு ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தால், பிரதமர் பதவிகளையோ அல்லது ஜனாதிபதி பதவிகளையோ தனக்கு முன்னரே பெற்றுக் கொள்ள முடியும். தானும் தனது குழுவும் எப்பொழுதும் மக்களுக்காவே கொள்கை ரீதியாக தீர்மானங்களை எடுத்தேன்.

அத்துடன், நாட்டில் கொலைக் கலாசாரத்துக்கும் வன்முறைக் கும் இடமில்லை. நாட்டில் நீதியும் நியாயமும் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், போதைப்பொருள் கலாச்சாரம், தீவிரவாதம், இனவாதம் போன்றவற்றுக்கு இடமில்லை

எந்தஒரு பயங்கரவாதத்தையும் ஆரம்பிக்க அனுமதிக்கப்படமாட்டாது, மேலும் இந்த நாட்டின் சிங்களவர் அல்லாத மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு வழங்கப்படும் என்றும், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அங்கு செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, மக்களுக்கான சலுகைகள் இன்றி மக்களுக்காக நாட்டுக்காக சேவையாற்ற விரும்பும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்துள்ளதாகவும் கொள்கையை அடிப்படையாக கொண்ட ஆட்சிக்காக எம்முடன் ஒன்றிணையுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

அத்துடன் நாட்டின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு விசேட நிதியம் ஸ்தாபிக்கப்படும் என்றும், 76 வருட காலம் குறித்து பேசும் போது நாம் பெருமடைகிறோம். எந்தவொரு எதிர்க்கட்சியும் மேற்கொள்ளாத பணியை ஐக்கிய மக்கள் ஆற்றயுள்ளது என்றார்.

# அனைவரையும் உள்ளடக்கியதான அபிவிருத்தியே காலத்தின் தேவை

## மே தின உரையில் சஜித் தெரிவிப்பு

சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் சௌபாக்கியம் கிட்டும் யுகத்தை உருவாக்க எனது தந்தை முயற்சித்தார். எனவே, அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியே காலத்தின் தேவை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 31ஆவது சிரார்த்த தின நிகழ்வும், கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்கு அருகில் அமைந்துள்ள மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் ஜனாதிபதி மறைந்த ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் ஹேமா பிரேமதாச உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ரணசிங்க பிரேமதாச அவர்கள் கூட நாட்டில் இரண்டு பயங்கரவாத யுத்தங்களை எதிர்கொண்டிருந்த காலக்கட்டத்திலயே ஆட்சியைப் பிடித்தார். அவ்வாறானதொரு நிலை இருந்தும் நாட்டின் அபிவிருத்தியை அவர் ஒருபோதும் தடைப்படுத்தவில்லை. அவர் ஒருபோதும் பொருளாதாரத்தை சுருக்கவில்லை. அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

உண்மையாக, சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் சௌபாக்கியம் கிட்டும் யுகத்தை உருவாக்க முயற்சித்தார். அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியே காலத்தின் தேவை.

இந்த இலக்குகளை அடைவது எளிதான பயணம் அல்ல, சிரமங்கள் மற்றும் தடைகள் கொண்ட பயணம். இந்த இலக்குகளை பேச்சின் மூலம் பூர்த்தி செய்ய முடியாது. முழு நாட்டுக்கும் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். பதில்களும் தீர்வுகளும் நேர்மறையானதும் பயனுள்ளதுமாக இருக்க வேண்டும். இந்தத் தீர்வுகள் கால அட்டவணையை அடிப்படையாகக் கொண்டமைய வேண்டும்.

இருள்சூழ்ந்துகிடக்கும் நாட்டுக்கு வெளிச்சத்தை கொண்டுவர இன, மதம் சாதி, குலம், வர்க்கம், கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட வேண்டும். இந்த ஒன்றிணைவு, குடும்பம் மற்றும் நண்பர்களை பாதுகாப்பதாக அமைந்துவிடக்கூடாது. அரசியல் சந்தர்ப்பவாதத்தை ஒதுக்கி வைத்துவிட்டு தேசம், மக்கள், நாடு குறித்து சிந்தித்து, இவற்றின் தேவைகளில் கவனம் செலுத்தியே இந்த ஒன்றிணைவு இடம்பெற வேண்டும்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச குடும்பத்துக்கு முன் நாட்டைப் பற்றியே சிந்தித்து செயற்பட்டார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் நாட்டு மக்கள் அனைவரையும் நண்பர்களாக கருதி பணியாற்றினார்.

அந்த பயணத்தில் நாமும் செல்ல வேண்டும். அவர் வகுத்துள்ள அபிவிருத்தி இலக்குகளை விஞ்சும் யுகத்தை உருவாக்க நாம் ஒன்றிணைய வேண்டும்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களை நேசித்த எமது நாட்டு மக்கள் தற்போது வறுமையாலும் மேலும் பல பிரச்சினைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் தற்போதைய நிலையில் புதிய சவால்களுக்கு புதிய தீர்வுகளை வழங்கும் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதே உண்மையிலேயே ரணசிங்க பிரேமதாசவை நினைவுகூருவதாக நான் கருதுகிறேன்.

எல்லா இடங்களிலும் ஜீவனோபாயம் வீழ்ச்சி கண்டு, வாழ்வாதாரங்களின் சரிவு ஏற்பட்டு, முழு நாட்டின் பொருளாதார செயல்முறை முடங்கி, நாட்டு மக்களின் துயரத்துக்கு வழிவகுத்துள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் நாம் உண்மையில் மக்களுக்காக முன்நிற்க வேண்டும் என்றார்.

இதேவேளை, மொரட்டுவ, லுனாவ ஸ்ரீ போதிராஜாராம விகாராதிபதியும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கைகள் துறைப் பேராசிரியருமான சங்கைக்குரிய அகலகட சிரிசுமண தேரரினால் ஸ்ரீ சுச்சரித மண்டபத்தில் தர்ம போதனை நிகழ்த்தப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

# சிறுதோட்ட காணி உரிமையாளர்களாக மலையக மக்களை ஆக்கிக் காட்டுவேன்

## மே தின நிகழ்வில் சஜித் சூளுரை

மலைநாட்டு மக்களை தொழிலாளர்களாக அன்றி, சொந்தமான காணியை உடைய சிறுதோட்ட உரிமையாளர்களாக்கி, உங்களை அந்த காணிக்கான உரிமையாளராகவும் ஆக்குவேன் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டம் நேற்றைய தினம் தலவாக்கலை நகரசபை மைதானத்தில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நடைபெற்றது. இதில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், மற்றும் அர்ஜுண ரணதுங்க உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மலையக மக்களையும், அவர்களின் மொழி உரிமையையும் பாதுகாப்பேன். அவர்களுக்கு காணி மற்றும் வீட்டு உரிமை வழங்கப்படும். மலையக மக்களின் கிராமிய, நகர அபிவிருத்திக்கு நான் பொறுப்பு. அவர்களின் மருத்துவ, கல்வி, சத்துணவு உரிமைகளை பாதுகாப்பேன்.

தோட்டத் தொழிலாளர்களை சிறு தேயிலை உற்பத்தியாளர்களாக மாற்றுவேன். உங்களின் அரசியல், மத, கலாசார உரிமைகளும் பாதுகாக்கப்படும். அனைத்து நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக உழைத்த பெருந்தோட்ட மக்களுடன் மே தினக் கூட்டத்தை நடத்த வாய்ப்பு கிடைத்தமையை நான் பாக்கியமாக கருதுகின்றேன்.

நான் உங்களை தோட்டத் தொழிலாளர்கள் என்று அழைக்க விரும்பவில்லை. நீங்கள் மலைநாட்டு மக்கள். உங்களுடன் கைகோர்த்து உங்கள் வாழ்க்கையை நாம் பாதுகாப்போம். மலைநாட்டு மக்கள் வாழும் சகல மாவட்டங்களிலும் அவர்களின் சகல உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான விசேட அரச பொறிமுறையொன்றை உருவாக்குவோம்.

இதுவரை கால வரலாற்றில் உங்களை தொழிலாளர்களாகவே வைத்திருப்பதற்கே அனைவரும் முயற்சித்தனர். தேர்தல் காலங்களில் மாத்திரம் உங்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக கூறுவார்கள். அதனை விட உயர்ந்த ஒரு விடயத்தை இங்கு நான் முன்வைக்கின்றேன்.

எனது தந்தை குடியுரிமையை வழங்கிய இந்த மலைநாட்டு மக்களை தொழிலாளர்களாக அன்றி சொந்தமான காணி உடைய சிறுதோட்ட உரிமையாளர்களாக்கி, உங்களை அந்த காணிக்கான உரிமையாளராகவும் ஆக்குவேன் என்றார்.

## தமிழரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தை முடக்கி, உட்கட்சி ஜனநாயகத்தை சவாலுக்கு உட்படுத்தி, கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் அது தொடர்பில் கருத்துரைக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு தலைமைப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டதால் என்னை இன்று நீதிமன்றில் நிறுத்தியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கடந்தும் கட்சியைத் தளம்பலற்றுக் கொண்டுசெல்வதற்காக நான் மேற்கொண்ட விட்டுக்கொடுப்புகள், எதிர்கொண்ட சமரசப் பேச்சுகள், அது சார்ந்து நான் முன்னெடுத்த முயற்சிகள் என எல்லாவற்றையும் மக்களுக்கு ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

அதே நிலைப்பாட்டின் அடிப்படையில், இந்த மாபெரும் மக்கள் மன்றத்தின் முன்னிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்காலத்தையும் கட்சித் தலைமையின் எதிர்காலத்தையும் முன்னிறுத்தி எனது புரட்சிகர அரசியல் பயணத்தை ஆரம்பிக்கிறேன் என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான மனோ கணேசன் பங்கேற்றிருந்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, பொதுச்செயலாளர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# உலகப் பொருளாதார மன்றம் நிறைவு ; பல முக்கிய சந்திப்புகளில் அலி சப்ரி!




சவூதி அரேபியாவின் ரியாத் நகரில், ஏப்ரல் 28-29ஆம் திகதிகளில் சவூதியின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் ஆதரவில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டம், அதிகரித்து வரும் எல்லை தாண்டிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் வளர்ச்சியை உள்ளடக்கிய வாய்ப்புகளுக்கான தெளிவான பாதைகளை சமைத்து வெற்றிகரமாக முடிவுற்றது.

ஸ்ரீநரழவ்உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஆற்றல் ஸ்ரீ நரழவ் என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இம்மன்றத்தில் முன்னணி அரசியல், பொருளாதார மற்றும் முக்கிய தொழில்நுட்ப பிரமுகர்கள் உள்ளடங்களாக 1,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். சுவிட்ஸர்லாந்தின் டாவோஸிற்கு வெளியே நடாத்தப்பட்ட ஒரு றுநுகு நிகழ்வில் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களைக் கண்ட ஒரு முக்கிய நிகழ்வாக இது அமைந்தது.

இலங்கை சார்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் இச்சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இப்பயணத்தின் போது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் பைசல் பின் பர்ஹான் உட்பட பல அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிகழ்வின் போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சவூதி அரேபியாவின் முதலீட்டு அமைச்சர் காலித் அல் பலிஹ் ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது நீண்டகாலமாக உணரப்பட்ட தேவையாகவும் இரு நாடுகளிலும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவுவதாகவும் அமையும்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களின் சவூதியின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் பின் பாதில் அலி இப்ரஹிம் உடனான சந்திப்பின் போது இரு நாட்டுக்குமிடையாலான உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைக்கும் பகுதிகள் மற்றும் சமீபத்திய பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினர்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மற்றும் மந்த நிலையிலுள்ள நாடுகள் தொடர்பாக சவூதிஅரேபியா ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் இலங்கை பங்கேற்பதாகவும் வெளிவிவகாரஅமைச்சர் அலி சப்ரி அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முக்கியமாக பொருளாதார ரீதியான வளர்ச்சியில் மந்த நிலையில் உள்ள ஆசிய,ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதாரம், செயற்கை நுண்ணறிவு மற்றும் விண்வெளி ஆராய்ச்சியியல் ஆகிய துறைகளில் பலமுன்முயற்சிகளைத் தொடங்குவதற்கு இந்தக் கூட்டம் சந்தர்பத்தை அமைத்துக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை நிறுவனத்துடன் மூன்று முக்கிய ஒப்பந்தங்களை சவூதி அரேபியா மேற்கொண்டுள்ளது. பல நாடுகளில் சுகாதாரத்தை மேம்படுத்துதல்மற்றும்போலியோவைதடுக்கும்நோக்கத்துடன், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் மற்றும் சவூதியின் சுகாதார அமைச்சகம் ஆகியவை இணைந்து இவ்வொப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சவூதியின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அலி இப்ராஹிம் கருத்துத் தெரிவிக்கையில், உலகம் வாய்ப்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கு மத்தியலான தடுமாற்ற நிலையல் உள்ளது என்றும், மேலும் ஒவ்வொரு நாடும் அதன் செல்வம் அல்லது அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் உலகளாவிய பொருளாதாரத்தை செழிப்பானதாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும் ஆற்றல் மாற்றத்தை ஆதரிப்பதற்குமான மூன்று முன்முயற்சிகளும் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

முக்கியதுறைகளில்முன்னணிசவூதிநிறுவனங்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக ஒரு முன்னோடியான முன்முயற்சித்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது விரிவான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி உத்திகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கார்பன் சேமிப்பு மற்றும் பயன்பாடுகள் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் குறித்த அமர்வில்,எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் அஸீஸ் பின் சல்மான், சமமான ஆற்றல் மாற்றத்திற்கானதீர்வுகளைஆராயவேண்டியதன்அவசியத்தை வலியுறுத்தினார், மேலும் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையிலும், வரவிருக்கும் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையிலும் எரிசக்தி ஆற்றல் துறையில் மேம்பட்ட அமைப்புகளையும் திட்டங்களையும் உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

உலகளாவிய ஒத்துழைப்பு மேம்படுத்தல் தொடர்பான அதிகமானகலந்துரையாடல்கள்மற்றும்அமர்வுகள்இந்நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சவூதியன் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல்-சௌத் அவர்கள் தலையமையில் இவ்வமர்வுகள் இடம்பெற்றதோடு, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் விரிவடைந்து வரும் மோதல்கள் உட்பட மிக முக்கியமான புவிசார் அரசியல் சவால்களை சமாளிப்பதற்கான ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் முக்கிய இடம் வகித்தது. இதே தலைப்பில் உரையாற்றிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஆதெல் அல் ஜுபைர், நிலையான பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைய தெளிவான பாதையைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உலக பொருளாதார மன்றத் தலைவர் பொர்க் ப்ரென்டே இக்கூட்டம்பற்றி கருத்து தெரிவிக்கையில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் மற்றும் இங்கிலாந்து வெளியுறவு செயலர் டேவிட் கமரூன் உள்ளிட்டமுக்கிய உலகத் தலைவர்களை ஈர்த்த முக்கியமான ஒரு கூட்டம் என்றார்.

இந்த நிகழ்வில் பல புதிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக மாடர்னா தலைமைநிர்வாகஅதிகாரிஸ்டீபன்பான்செல், புற்றுநோய்க்கான முதல் மருத்துவ தயாரிப்பிற்கான பணிகளை 2025 ஆம் ஆண்டாகும் போது தொடங்குவதற்கான நிறுவனத்தின் திட்டங்களை அறிவித்தார்.(05)

# இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஒலுவில் துறைமுகத்துக்கு விஜயம்





(எம்.ஏ.றமீஸ்)

ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும்,அதன் அபிவிருத்தி தொடர்பில் மேலதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் செவ்வாய்க்கிழமை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஒலுவில் பிரதேசத்திற்கு உத்தியோகவிஜயமொன்றைமேற்கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின் பேரிலே,அவரது ஒலுவில்விஜயம்அமைந்தது..

ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், அப்பிரதேசத்தில் ஏற்படும் கடலரிப்பு தொடர்பிலும் விரிவான கலந்துரையாடலொன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமாலெவ்வை, எம்.ஐ.எம்.மன்சூர் மற்றும் அரச உயரதிகாரிகள் மீனவர்கள் துறை சார் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(05)

# தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மே தின ஊர்வலம் திருகோணமலையில்!

ஹஸ்பர் ஏ.எச்

சர்வதேசதொழிலாளர்தினத்தை முன்னிட்டுமேதினஊர்வலமொன்று திருகோணமலையில் நேற்;று (புதன்கிழமை) இடம் பெற்றது.

குறித்த ஊர்வலத்தை தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்சி முக்கியஸ்தர்கள் இணைந்து ஏற்பாடு செய்தனர்.

உழைப்பே உயர்வு எனும் தொனிப்பொருளின் கீழ் இடம் பெற்ற இவ் ஊர்வலம் உவர்மலை சந்தியில் இருந்து லிங்க நகர் வரை பேரணியாக சென்றனர். அதன் பின் மே தினம் தொடர்பான நிகழ்வும் இடம் பெற்றது.

இதில் பொது மக்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(05)

# பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கல்



(வி.ரி. சகாதேவராஜா)

புத்த சாசன மற்றும் மத கலாசார அலுவல்கள் அமைச்சின் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற பல்வேறு பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்துகொண்டார்.

ஏனைய அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா கிராம பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்த சாமி, பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பல கண்கவர் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொழிலாளர் உரிமைக் குரல் எங்கே?

உலகத் தொழிலாளர் நாள் கூட்டங்களும் பேரணிகளும் இம்முறை தெற்கிலும் வடக்கிலும் வழக்கம்போல வேறு வேறு அரசியல் தளங்களிலேயே நிகழ்ந்துள்ளது. தெற்கில் பெரும்பாலும் அனைத்து நிகழ்வுகளுமே வரப்போகும் தேர்தல்களை இலக்குவைத்து அதற்கான பரப்புரைகளாகவே இடம்பெற்றதனைக் காண முடிந்தது. வடக்கு கிழக்கில் தமிழ்த்தேசியக் கட்சிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் கட்சிகள் ஒழுங்கு செய்த தொழிலாளர் நாள் நிகழ்வுகள் தமிழர்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதாக இருந்தன. எந்தத் தரப்பிலும் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவோ மேம்படுத்தவோ முன்முயற்சிகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்பது கவலைக்குரியது.

தொழிலாளர்களின் உரிமைக்காகத்தான், அவர்களின் 8 மணி நேர வேலை என்கிற உரிமையை நிலைநிறுத்திய போராட்டத்தின் நினைவாக வைகாசி முதல் நாள் உலகத் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது என்றாலும் இலங்கையில் அது எப்போதும் மிகை அரசியலுக்கு உட்பட்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள் தமது கட்சிசார் தொழிற்சங்களின் மூலமாக தொழிலாளர்களை இந்த நாளில் தமது பேரணிகளுக்கும் கூட்டங்களுக்கும் அணி திரட்டினாலும், அந்த அணி திரள்வு கட்சிகளின் அரசியல் பலத்தை வெளிப்படுத்துவதற்கும் அரசியல் நகர்வுகளுக்குமாகவே பயன்படுத்தப்படுகின்ற போக்கு மாறவேண்டும்.

இம்முறை மே தினக் கூட்டங்களின் இந்தப் போக்கில் அரசியல் நெடி இன்னும் காரமாக வீசுகின்றது. தேர்தல் வாக்குறுதிகளே கூட்ட மேடைகளில் எடுத்து வீசப்பட்டன. அரசியல்விளக்கவுரைகளே நிகழ்த்தப்பட்டன. அல்லது தமது அரசியல் கோரிக்கைகளே முன்னிறுத்தப்பட்டன. ஆனால், எந்தவொரு மேடையிலும் தொழிலாளர்களின் நலன்களை முன்னிறுத்தும் குரல்களைக் கேட்கமுடியவில்லை. இலங்கைத் தொழிற்றுறையில் நிலவும் பால்நிலை வேதன வேறுபாடுகளை நீக்குவதற்கான வலியுறுத்தல்களை எங்கும் கேட்க முடியவில்லை.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கான வட்டி வீதங்களைக் குறைத்து ஆளும் தரப்பு ஒரு புறத்தில் தொழிலாளர்களைச் சுரண்டுகின்றது என்றால், மறுபுறத்தில் இவற்றைச் செலுத்தாமலும் அல்லது உரிய காலத்தில் செலுத்தாமலும் முதலாளிகள் சுரண்டுகின்றார்கள். அதற்கெதிராகவோ, அதனை மாற்றுவதற்கான அரசியல் தலைமையை வழங்குவது குறித்தோ எதுவும் பேசப்படவில்லை. பட்டதாரிகள் பலரும் அரச அலுவலகங்களிலேயே கீழ் உழைப்பு பணிகளை ஆற்ற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நிலை மாற்றம் குறித்தும் எந்த அக்கறையையும் கேட்க முடியவில்லை. இளைஞர்கள் பலர் வேலை வாய்ப்பு இன்றி உழைக்கும் வர்க்கம் வீணடிக்கப்படுவது குறித்து எந்தக் குரல்களையும் கேட்க முடியவில்லை. அரச அலுவலகங்களிலும் தொழில் இடங்களிலும் தொடர்ந்தும் மனிதாபிமானம் இன்றி நடத்தப்படுவது குறித்தும் பல சமயங்களில் தாக்கப்படுவது குறித்தும் எந்தக் கண்டனங்களையும் கேட்கமுடியவில்லை.

உலகத் தொழிலாளர் நாளில் இலங்கையின் தொழிலாளர்களுக்கான உரிமைக் குரலுக்குப் பதில் அரசியலுக்குள் அனைத்துமே மூடி முடக்கப்படும் இந்த நிலைமைமாற்றம் அடையவேண்டும். தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததே ஓர் அரசியல்தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனவே தொழிலாளருக்கான மேடைகளில் அரசியல் பேசப்படுவது தவறில்லை என்ற கருத்திற்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தொழிலாளர்களின் உரிமைக்கான குரலுடன் அவை சேர்ந்திருக்கவேண்டுமே தவிர, தனித்தல்ல என்பதுதான் இங்கே அழுத்திக் கூறவிரும்புவது.

# மாற்றம் ஏற்படுத்தும் விளம்பரங்கள்

**பவித்ரா நந்தகுமார்**



விளம்பரம் என்பது பன்னெடுங் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது. விளம்பரத்தின் பண்டைய வடிவம் பாறை ஓவியம் என்கிறார்கள். இது ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவின் பல பகுதிகளில் இன்றும் காணப்படுகிறது. எகிப்தில், செய்திகள், சுவரொட்டிகளை உருவாக்க தாவர மூலப்பொருளான பாப்பிரஸ் பயன்படுத்தப்பட்டது.

முதல்முதலாக பண்டைய சீனாவில்தான் விளம்பரம் வாய்மொழி வடிவம் எடுத்தது. பின்னர் அது இசை வடிவத்திற்கு மாறியது. அங்கு மிட்டாய்களை விற்க புல்லாங்குழல்களை இசைத்து விளம்பரப்படுத்தினர்கள். பின்னர் மையினால் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள், காகித பிரதிகளை விளம்பர வடிவங்களாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மனிதர்கள் எப்போதும் வணிகச் செய்திகள் குறித்தும் அது சார்ந்த சேவைகளை மேம்படுத்துவதற்கும் வழிகளைத் தேடுகின்றனர். இத்தனை பாரம்பரியம் கொண்ட விளம்பரங்கள், கடந்த நூற்றாண்டில் அச்சு, வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களைச் சுற்றியே இருந்தன.

முதலில் சுவர்களில் விளம்பரங்கள் எழுதப்பட்டன. இதற்கென ஓவியர்கள் இருந்தனர். சுவரோவியர்கள் என்றழைக்கப்பட்டனர். அடுத்தபடியாக வானொலியில் இடம்பெற்ற விளம்பரங்கள். அவையெல்லாம் அந்த நாட்களில் கேட்க கேட்க சுவாரசியமாக இருக்கும். பின்னர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள்தான் பெரும்பாலான மக்களைச் சென்று சேரும் கருவிகளாகப் பார்க்கப்பட்டன. இன்று தொலைக்காட்சியையும் தாண்டி சமூக ஊடகங்களில், செயலிகளில் கூட விளம்பரம் நம்மை ஆட்கொள்கிறது.

தொலைக்காட்சியிலாவது நமக்கு பிடிக்கவில்லை எனில் வேறு அலைவரிசைக்கு மாறிக் கொள்ளலாம். ஆனால் யூ- டியூப் போன்ற சில செயலிகளில் தோன்றும் சில விளம்பரங்கள், குறிப்பிட்ட மணித்துளிகள் நம் பார்வைக்கு நிச்சயம் இருக்கும்.

விளம்பர நிறுவனங்களும், மிகக் குறைந்த நேரத்தில் மக்களைக் கவர தங்கள் மூளையைப் கசக்கி பிழிந்து, ஆய்ந்து, ஆழ்ந்து என பலவிதமாக யோசிக்கிறார்கள். அப்படிப்பட்ட விளம்பரங்கள் மக்களிடையே எப்படிப்பட்ட தாக்கத்தை உருவாக்குகின்றன?

இங்கு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் பெரும்பாலும் நமது உணர்வுகளுக்கு நெருக்கமாக இருக்கும். ஆனாலும், நம் நாட்டு விளம்பரங்களில் பாலின பாகுபாடு மலிந்து கிடக்கிறது.

'ஒரு குழந்தை வாசலில் விழுந்திருக்கும் பால் பாக்கெட்டை அம்மாவிடமும் நாளிதழை அப்பாவிடமும் கொண்டு போய் கொடுக்க, யர் பழக்கியது' என்ற கவிதை வரிகளின் பிரதிபலிப்பைத்தான் நம் நாட்டில் விளம்பரங்கள் தொடர்ந்துகொண்டே வருகின்றன.

வீட்டு வேலை செய்ய பெண்கள் மட்டுமே பணிக்கப்பட்டவர்கள் என்பது போன்ற மாயையை சிலர் தொடர்ந்து கட்டமைத்து வந்திருக்கிறர்கள். இது விளம்பரங்களள் மூலம் மிக அதிகமாகக் கட்டமைக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல, பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதிலும் அழகாகக் காட்டிக்கொள்வதில் மட்டுமே ஆர்வமாக இருப்பது போன்று பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

சமையல் சாதனங்கள் உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்களுக்கு பெண்களை முன்னி லைப்படுத்தும் விளம்பரங்கள், தொழில்நுட்பம் மற்றும் மின்சாதன பொருட்களுக்கு ஆண்களை முன்னிலைப்படுத்துகின்றன.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பாலின சமத்துவத்தை முன்னெடுக்கும் விளம்பரங்களும் கண்ணில்படுகின்றன. பெண்கள் மட்டுமே துணிதுவைப்பானில் துணிகளை இட்டு உலர்த்தும் நிலையைக் கடந்து, ஒரு தந்தை கால்பந்து பயிற்சி செய்யும் தன் மகளின் அழுக்கேறிய ஆடைகளை வாங்கி துணிதுவைப்பானில் வெளுத்துத் தருகிறர். இந்த சலவைத்தூள் விளம்பரம் குடும்பத்தின் ஆரோக்கியமான வாழ்வியலுக்கு அச்சிடுவதாக அமைகிறது.

அலுவலகத்திலிருந்து வரும் கணவனுக்கு மனைவி காஃபி போட்டுக் கொண்டு வந்து பருகக் கொடுக்கும் காட்சிகள் மாறி, காலையில் அலுவலகத்துக்கு அவசர அவசரமாகக் கிளம்பும் மனைவிக்கு காஃபி போட்டு கொடுத்து வழியனுப்பும் கணவர்கள் இப்போது விளம்பரங்களில் தென்படுகிறர்கள்.

நம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத் தைத்தான் இப்படியான விளம்பரங்கள் இன்று முன்னெடுத்துள்ளன. இந்தப் புரிந்துணர்வு மிக்க நடைமுறை பல்கிப் பெருகி பாலின சமத்துவம்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மாற்றம் ஏற்படுத்தும் விளம்பரங்கள்

4ம் பக்க தொடர்ச்சி...........

கொண்ட ஆரோக்கிய சமூகத்துக்கு வித்திடும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

நண்பர் ஒருவர், வெளிநாட்டில் படித்து அங்கேயே பணி செய்து வந்தர். திருமணம் முடிந்து சில ஆண்டுகள் அங்கேயே வசித்தபோது வீட்டு வேலைகளை கணவன் - மனைவி இருவரும் பகிர்ந்து செய்தர்கள். பின்னர் அவர்கள் தாயகத்திற்குக் குடிபெயர்ந்ததும் வீட்டு வேலைகளை எல்லாம் மனைவிதான் செய்ய வேண்டும் என்று கணவன் எதிர்பார்ப்பதாக அவரின் மனைவி தெரிவித்தர். இங்கிருக்கும் சூழலும் ஊடக விளம்பரங்களின் பிரதிபலிப்பும் காரணம் என்றும் அவர் சொன்னர்.

இந்தியாவில் இருக்கும் பெரிய வியாபார நிறுவனத் தயாரிப்பில் ஒன்றான ‘சிவப்பழகு பூச்சு’ (ஃபேர் அண்ட் லவ்லி) தற்போது பொலிவழகு பூச்சு (க்லோ அண்ட் லவ்லி’) என்று பெயர் மாற்றம் செய்து விற்பனை செய்து வருகிறது. கறுப்பு என்பது அழகு குறைவானது, சிவப்பாக மாறுவதே அழகு என பொருள் தரும்படி பெயர் இருப்பதாக அந்நிறுவனம் உணர்ந்ததால் இந்த முடிவை எடுத்தது.

கிட்டத்தட்ட 45 வருடங்களாக சந்தையில் வெற்றிகரமாக இருந்த இந்த நிறுவனத்தின் விளம்பரம் பலரின் உணர்வுகளோடு கலந்துள்ளது. அது இன்று சிவப்பு நிறம்தான் அழகு என்ற அணுகுமுறையைத் தூக்கி எறிந்துள்ளது. நம் தோலின் நிறம் இயற்கை சார்ந்தது என்று உணர்ந்து எடுக்கப்பட்ட முடிவு இது.

அழகு நிலையம் நடத்தும் பெண்மணி ஒருவர், தொலைக்காட்சி பேட்டி ஒன்றில், ‘இப்பொழுதெல்லாம் என்னிடம் மணமகள் அலங்காரத்துக்கு வரும் பெண்கள், எங்களை எங்கள் இயல்பான நிறத்திலேயே காட்டுங்கள், சிவப்பழகை ஏற்றிக் காட்டாதீர்கள் என வெளிப்படையாகச் சொல்கிறர்கள்’ என்றர். சமூக மாற்றத்தை பிரதிபலிக்கும் விளம்பரங்கள் மக்கள் மனதுக்கு மிகவும் நெருக்கமாகிறது.

புற்றுநோய் சிகிச்சை எடுத்துக் கொள்ளும் பெண்மணி ஒருவர், தன் கூந்தல் முழுவதையும் இழந்த நிலையில்‘அழகாக தோன்றுவதற்கு கூந்தல் அவசியம் இல்லை’ என்று சொல்லும் வாசகம் சமூகத்தின் சிந்தனையை மாற்றிப் போடுகிறது. இது பிரபல கூந்தல் தைலத்திற்கான விளம்பரம் என்பதுதான் இதில் கூடுதல் ஆச்சரியம்.

தன்னம்பிக்கை தரும் விளம்பரங்களும் பெருவாரியான மக்களின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பிரபல வங்கி விளம்பரம் ஒன்றில், கர்ப்பிணிப் பெண் ஒருவர் கைப்பேசியில் தன் தாயிடம் பேசிக்கொண்டே வங்கியை நோக்கிச் செல்கிறர். வங்கி வாசலில் இருக்கும் காவலர் நேரம் முடிவடைந்ததால் வங்கிக்கதவை மூடிவிட்டு ‘மூடப்பட்டது’ என்ற அறிவிப்பு பலகையை வைத்து விடுகிறர்.

அப்போது அங்கு வரும் அந்த கர்ப்பிணி பெண்ணை பார்த்துவிட்டு கதவை திறந்து ‘திறந்துள்ளது’ என்ற அறிவிப்புப் பலகையை வைக்கிறர். கதவை மீண்டும் திறந்தது குறித்து மேலாளர் வினவ, காவலர் தன் கழுத்தை திருப்பி கர்ப்பிணிப் பெண்ணை காட்டுகிறர். அந்த மேலாளரும் ஒரு சிறு புன்னகையுடன் தலையசைத்தபடி சென்று விடுகிறர். ‘வீ கேர் ஃபர் யூ’ என்ற வாசகத்துடன் அந்த விளம்பரம் முடியும். இது போன்ற விளம்பரங்கள் மக்களின் மனமாற்றத்திற்கு வித்திடுகின்றன.

‘எப்பவாச்சும் சும்மா இருந்து பாருங்க’ என நம்மை சோம்பேறிகள் ஆகும் அனத்தல்களும் ‘சோப்பு போட்டு குளித்தால் தைரியம் வரும்’ என்னும் அபத்தங்களும் முழங்கிக் கொண்டே இருந்தாலும், நாம் எப்போதெல்லாம் சாப்பிட அமர்கிறோமோ அப்பொழுதெல்லாம் கழிப்பறையை சுத்தம் செய்யும் விளம்பரம் வந்துவிடுகிது எனப் பலரையும் புலம்ப வைத்தாலும் விளம்பரங்கள் இன்றைய நவீன உலகில் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன.

பால்ய காலம் முதல் பல் துலப்பான் முழுவதும் பற்பசையை பரப்பி விடும்படியான விளம்பரங்களை மட்டுமே பார்த்ததால் அன்று முதல் அப்படியே பழகிப் போனேன். பின்னாளில் பல் மருத்துவர் ஒருவர், பட்டாணி அளவு பற்பசையை பயன்படுத்தினால் போதும், பல் துலப்பான் மீது அவ்வளவு நீளமாக இட வேண்டும் என்று அவசியமே இல்லை. அது கெடுதியும்கூட என்றர்.

அதிலும் குழந்தைகளுக்கான பற்பசைகளில் இது மிகவும் முக்கியம். ஆனால் நாம் தினசரி பார்த்து பார்த்து பதிந்த காட்சிகளால் அதன் வழிக்கு தள்ளப்படுகிறோம். இது ஒரு சின்ன உதாரணம்தான். கூர்ந்து கவனித்தால் பல உண்மைகள் விளங்கும்.

மற்றொருபுறம், விளம்பரங்களில் வரும் பிரபலங்கள் உண்மையிலேயே அந்தப் பொருளை பயன்படுத்த மாட்டார்கள் என்பதே உண்மை. பல வருடங்களுக்கு முன் இந்தியாவின் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனின் ஏபிசிஎல் நிறுவனம் கடனில் மூழ்கியது. அது முதல் அவர் பல்வேறு விளம்பரங்களில் நடிக்கத் தொடங்கினர். அதில் ஒன்று பிரபலமான குளிர்பான விளம்பரம். ஒரு சமயம் ஜெய்பூரில் நடந்த ஒரு பாடசாலை நிகழ்வில் ஒரு மாணவி அவரிடம், ”என்னுடைய ஆசிரியர் நஞ்சு எனத் தெரிவித்த குளிர்பானத்தை ஏன் நீங்கள் அனைவரையும் குடிக்கச் சொல்லி ஊக்குவிக்கிறீர்கள்” எனக் கேட்டர். அதன் பின்னர் அந்த குளிர்பான விளம்பரத்தில் அவர் நடிக்கவில்லை. 2014 - ஆம் ஆண்டு ‘தி எகனாமிக் டைம்ஸ்’ தெரிவித்த தகவல் இது.

அது மட்டுமல்ல, பல நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக எண்ணற்ற பரிசுப் பொருட்களைத் தருவதாக அறிவிக்கிறர்கள். இது நல்ல செயல்பாடுதான். ஆனால் அந்தப் பரிசுத்தொகையோ, பரிசுப் பொருட்களோ முறையாக உரியவர்களுக்குச் சென்று சேர்ந்ததா என்பதை கண்காணிக்க அங்கீகரிக்கப்பட்ட எந்தக் குழுவும் இல்லை. அந்த நிறுனங்களே அறிவித்தால்தான் உண்டு. இந்தப் பரிசுத் திட்டத்தையும் முறைபடுத்த வேண்டும்.

நம்முடைய உழைப்பும் நம்பிக்கையும் பணமும் நமக்கு விலைமதிப்பு மிக்கவை. ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருப்பர்கள். பகுத்தறிந்து நம்மை நாம் தற்காத்துக் கொள்ள வேண்டிய காலம் இது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே வள்ளுவர் சொல்லிவிட்டுச் சென்ற ”எப்பொருள் யர்யர்வாய்க் கேட்பினும் அப்பொருள்” மெய்ப்பொருள் காண்பதறிவு என்னும் குறளை இதற்கும் நாம் வழிகாட்டியாய் எடுத்துக் கொள்வது பொருத்தமாய் இருக்கும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தமிழர் பாரம்பரியத்துடன்கூடிய சித்திரைப் பெருவிழா சிட்னியில்



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ஆஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் தமிழர் பாரம்பரியத்தை மறக்காமல் நடத்திய சித்திரைத்திருநாள் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை சிட்னி லிட்டன்ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.





ஒஸ்கார் அமைப்பின் நடப்பாண்டுத்தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

அதிதிகளாக ஒஸ்கார் அமைப்பின் போசகர்களான சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவிய உதயசூரியன் நாகமணி குணரெட்ணம், முன்னாள் பட்டய கணக்காளர் ரி.பிரகதீஸ்வரன், முன்னாள் பொறியியலாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு பெருமக்கள் அனைவரும் பங்கு பற்றினார்கள்.

நான்கு மணி நேரமாக ஒரே குதூகலமாக நடைபெற்ற அந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பரிசில்கள்கள் வழங்கப்பட்டன என ஒஸ்கார் செயலாளர் திருச்செல்வம் லாவண்யன் தெரிவித்தார்.(05)

# சித்திரைப் புத்தாண்டு கயிறுழுத்தல் மண்டானையில் களைகட்டியது





(வி.ரி. சகாதேவராஜா)

விநாயகபுரம் சமுர்த்தி வங்கியின் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் மண்டானை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சசிகுமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம் முகாமைத்துவ பணிப்பாளர் பி.கமலேஷ்வரன் தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாரம்பரிய கலாசார விளையாட்டுகளுடன் கயிறிழுத்தல் போட்டி அனைவரையும் பரவசப்படுத்தியது.

மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலய வங்கி உதவி முகாமையாளர்கள், வங்கி வலயகள உத்தியோகத்தர்கள், திட்ட உதவியாளர், சமுர்த்தி தலைமைகாரியாலய ச.அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட, வங்கி க.பா.சபைத் தலைவர்கள், வர்த்தக.ச.தலைவர் உறுப்பினர்கள், சமுர்த்தி உற்பத்தியாளர்கள், சமுர்த்தி வங்கி வாடிக்கையாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)



## தமிழ்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர். ப. சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 'விழிப்படைவார் தொழிலாளர் விடியும் தேசம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய மே தினக் கூட்டம் பெரியகல்லாறு சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

பெரியகல்லாறு வட்டார கிளையினரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மே தின கூட்டமானது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அவர்களின் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக சித்தி விநாயகர் ஆலய முன்றலை வந்தடைந்து கூட்டம் நடைபெற்றது.

இந்த மேதினக் கூட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த இன்னாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மாவட்ட கிளை, பிரதேச கிளை, வட்டாரக் கிளை உறுப்பினர்கள் மற்றும் கட்சி தொண்டர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் எனப் பொருந் திரளானோர் கலந்துகொண்டதோடு பல தொழில்சங்கங்களின் பங்கேற்பும் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

## பெருந்தோட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் இணைந்து கொண்டதுடன், மைதானத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர். பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெற்றதுடன் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காணப்படுகிறது. மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி சக்திவேல், பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தலைவி அனுஷியா சிவராஜா, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் அனைவரும் மிகவும் கடினமான காலத்தை கடந்து வந்துள்ளோம். இதன் போது பெருந்தோட்ட மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம். ஆனால் சிரமங்கள் இருந்தபோதிலும், அவர்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களித்தனர்.

2023 ஆம் ஆண்டிலும் 2024 ஆம் ஆண்டிலும் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அதற்கு ஜனாதிபதி என்ற வகையில் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

உங்களின் கடின உழைப்புத்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியது என்று கூற வேண்டும். 2022 இல் நாடு இருந்த நிலைக்கு மீண்டும் செல்வதை இங்குள்ள யாரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். அதற்கு நாங்கள் யாரும் தயாராக இல்லை. நாங்கள் மிகவும் மோசமான சூழ்நிலைக்குச் சென்றோம்.

தற்போது இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது. தற்போது அனைவருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது. மேலும், அஸ்வெசும திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் நிவாரணத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரித்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால், சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளது. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை நாம் மறக்கவில்லை.

இந்த லயன் அறைகளை சட்டபூர்வமாக கிராமங்களாக அறிமுகப்படுத்த நானும் பிரதமரும் ஆலோசித்துள்ளோம். அதன் மூலம் இந்த இடங்களுக்கு கிராமங்களுக்கு கிடைக்கும் வசதிகள் கிடைக்கும்.

அதற்கான செயற்பாடுகளை அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்களை கற்பிக்க தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் பிரதமராக இருந்தபோது தோட்டங்களில் உள்ள பல பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஆரம்பித்தேன். சில பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையைத் தீர்த்து, அவற்றை மேம்படுத்தும் பணியும் இடம்பெற்று வருகிறது. மேலும், பெருந்தோட்டங்களில் தொழிற்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்களை ஆளும் தரப்பு என்ற ரீதியில் நாம் மறக்கவில்லை. அந்த மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் புரிந்துகொண்டுள்ளேன். எனவே எனக்குக் கீழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி என்ற வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

1982 ஆம் ஆண்டு சௌமியமூர்த்தி தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க நான் அப்போதைய கல்வி அமைச்சராக பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். பின்னர் 1986 இல் குடியுரிமை இல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்குவதாக ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன அறிவித்த போது நானும் அதற்கு ஆதரவளித்தேன்.

2003 ஆம் ஆண்டில் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து இந்தியாவில் குடியுரிமை இருந்தும் மீண்டும் அங்கு செல்ல விரும்பாத மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. தற்போது அந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன.

இப்போது இந்த பகுதிகளை முன்னேற்றுவதற்கான நேரம் இது. எனவேதான் சம்பளத்தை அதிகரித்து இந்த பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். மேலும் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் கிராமத்திற்கு மட்டுமல்ல, பெருந்தோட்டத்திற்கும் கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

### இதுதான் ஜனநாயகம்

# மே தினக் கூட்டங்களைச் சுட்டிக்காட்டி ஐ.தே.க. கூட்டத்தில் ஜனாதிபதி உரை

கொழும்பைச் சுற்றி பல மே தினப் பேரணிகள் நடைபெறுகின்றன. கெம்பல் மைதானத்தில் பொதுஜன பெரமுனவும், செத்தம் வீதியில் ஐக்கிய மக்கள் சக்தியும் தலவாக்கலையில் திகம்பரமும், கொட்டகலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பியும் இன்று மே தினக் கூட்டங்களை நடத்துகின்றன. இதுதான் ஜனநாயகம். நான் சர்வாதிகாரி என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் இன்று நடுவீதியில் கூட்டங்களை நடத்தலாம். என்னை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். இந்த நிலைமை இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் இருக்கவில்லை.

அன்று எதிர்க்கட்சித் தலைவர் தாக்கப்பட்டு காலிமுகத்திடலில் இருந்து துரத்தப்பட்டார். ஆனால் இன்று அவரது மே தின பேரணியை செத்தம் வீதியில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுதான் ஜனநாயகம். இந்த நாட்டின் அரசியல் முறைமை சீர்குலைந்ததால் நான் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆனேன்.

பொதுவாக ஒவ்வொரு நாட்டிலும் பிரதமர் பதவி விலகும்போது எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக நியமிக்கப்படுவார். ஆனால் நம் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல ஏனைய அனைத்துக் கட்சிகளும் பின்வாங்கி ஓடிவிட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஏற்றுக்கொள்ளும் எவருக்கும் ஆதரவளிப்பதாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இருந்த பொதுஜன பெரமுன அறிவித்திருந்தது. முதலில் எதிர்க்கட்சித் தலைவரிடம் வினவப்பட்டது. ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் ஜேவிபி முன்வரவில்லை. இறுதியாக, தனியொரு எம்.பி.யை கொண்ட கட்சியின் தலைவர் என்ற முறையில், நான் நாட்டின் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று. ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் சவால்களில் இருந்து ஓடியதில்லை. இதை ஏற்க வேண்டாம் என்று சிலர் கூறினர். ஆனால் நாங்கள் அனைவரும் ஒன்றாக முன்னேற்றம் கண்டோம்.

அன்று ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் பாராளுமன்றத்தை கைப்பற்ற முயன்றார்கள். இதையடுத்து பாராளுமன்றத்தில் இருந்த அனைவரும் ஓடிவிட்டனர். நான் என்ன செய்யலாம் என்று இராணுவத் தளபதி என்னிடம் கேட்டார். கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு என்ன நடந்தது என்று கேட்டேன். அனைவரும் சென்றுவிட்டதாக சொன்னார். அப்படியானால் பாராளுமன்றத்தைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு என்று அவரிடம் சொன்னேன்.

அன்று தப்பி ஓடியவர்கள் இன்று நாடாளுமன்ற ஜனநாயகம் பற்றி எப்படிப் பேசுகிறார்கள்? அந்தக் குழு பதவியில் இருந்திருந்தால், இன்றைய நாட்டின் நிலைமையை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

இன்று சகல இடங்களிலும் மே தினக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் பஸ்களில் வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன், பஸ்களை இயக்குவதற்கு எரிபொருள் இருக்கவில்லை. சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள் இன்றும் நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றன. புத்தாண்டை மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள். இப்போது மே தினத்தை கொண்டாடுகிறோம். இன்னும் மூன்று வாரங்களில் வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகும். அப்பொழுது கொழும்பு மீண்டும் மக்களால் நிரம்பியிருக்கும்.

அரசை நாம் துணிச்சலுடன் முன்னோக்கிக் கொண்டு வந்ததாலேயே கண்டி பெரஹெறாவை கண்டுகளிக்கவும் நல்லூர் திருவிழா மற்றும் தெவிநுவர பெரஹறா போன்றவற்றை பார்வையிடச் செல்வதற்கும் உகந்த சூழல் உருவானது. இதற்காக உதவிய அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மொட்டுக் கட்சியின் ஒரு பகுதியினர் ஒத்துழைப்பு வழங்கினர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தரப்பினரும் உதவ முன்வந்தனர். டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல தரப்பினர் எங்களுடன் இணைந்துச் செயற்படுகின்றனர்.

கட்சி சின்னமொன்று இல்லை. மொட்டுக் கட்சியின் ஒரு குழு எம்மோடு இணைந்தது. மற்றுமொரு குழு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது. மிகவும் சிரமப்பட்டு இந்த நிலைக்கு வந்துள்ளோம். எமது தீர்மானங்கள் வெற்றியளிக்கும் என்று எவரும் நினைக்கவில்லை. மேலும், குற்றச் செயல்களுக்கு எதிராகக் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. சிரமத்துடனாவது அந்தத் தீர்மானங்களை எடுத்தோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் போது புதிதாக பணத்தை அச்சிட முடியாது என்று அறிவிக்கப்பட்டது. மேலும் அரச வங்கிகளில் கடன் வாங்கவும் முடியாதென அறிவிக்கப்பட்டது. அரசு வருமானம் ஈட்ட வேண்டும் என்றும் தெரிவித்தனர். ரூபாயை பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கஷ்டமாக இருந்தாலும் அதற்கான முடிவுகளை எடுத்தோம். மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியும் அப்போது என்ன சொன்னார்கள்? ஆனால் இன்று நாட்டின் நிலைமை என்ன? இன்று ரூபாயின் பெறுமதி பலப்படுத்தப்பட்டுள்ளது. டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாவின் பெறுமதி 280 ஆக உள்ளது. ரூபாய் பெறுமதி வலுவடைந்திருப்பதால் மக்கள் கையிலிருக்கும் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது.

தற்போது, பல்வேறு நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகின்றனர். மேலும், கடந்த பெரும்போகத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. மேலும் தொழில்கள் மீண்டும் உயிர்பெறுகின்றன. சிறு மற்றும் நடுத்தர தொழில்களை பாதுகாக்கும் வகையில் பராட்டே சட்டத்தை ஒரு வருடத்திற்கு அமுல்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுத்தோம். மேற்படித் துறைகளை பாதுகாப்பதற்காக தனிப் பிரிவொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அதனால் மிகவும் சிரமப்பட்டே இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தினால் அந்த பாதுகாப்பு கிடைத்துள்ளது. இந்த நிலைமையை பாதுகாத்து முன்னேறிச் செல்வதா? அல்லது நாட்டை 2022 இல் இருந்த நிலைக்கு கொண்டுச் செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகளும் இத்திட்டத்திற்கு எதிராக செயற்படக்கூடாதென கேட்டுக்கொள்கிறேன்.

வேலைத்திட்டத்திற்கு இடையூறு செய்யவும் வேண்டாம். இந்த நிலையைப் பாதுகாக்க மக்களைப் பற்றிச் சிந்தித்து ஆளும் தரப்புடன் இணைந்துச் செயற்பட முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நாம் அனைவரும் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். 2003 ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டிற்குச் சென்று 03 பில்லியன் டொலர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தேன். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கினார்.

அதனால் 04 பில்லியன் டொலர்கள் கிடைத்தன. ஆனால் 2004 ஆம் ஆண்டில் அனைத்தும் மாறியது. அதனால் அவர்கள் திரும்பிச் சென்றனர். அந்த 04 பில்லியன் டொலர்கள் எம்மிடம் இருந்தால் இன்று அதன் பெறுமதி 10 பில்லியன் டொலர்களாக இருக்கும். 2018-2019 க்குள் வரவு செலவுத் திட்டத்தில் உபரி ஏற்பட்டது. அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை மாற்றினால் நெருக்கடி ஏற்படலாம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நாட்டின் துரித அபிவிருத்திக்கு தேவையான நிபந்தனைகள் அடங்கிய சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன். அதற்கு ஆதரவு தருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு ஆதரவளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதோடு, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாகவும் மாற வேண்டும். இந்த நாட்டின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. நாட்டு மக்கள் இன்னமும் கஷ்டத்தில் வாழ்கின்றனர். பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். 03 வருடங்களாக இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு சரிவடைந்தது. எனவே இளைஞர்களுக்கான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். பழைய பொருளாதார முறைமையினால் இதனைச் செய்ய முடியாது. இதற்கு பொருளாதாரம் திறக்கப்பட்டு புதிய முதலீடுகள் கொண்டுவரப்பட வேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் நிறுவனங்களின் வருமானம் குறைவடைந்திருந்தது. நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக 04,05 பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். வறுமையை ஒழிக்க கிராமப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். நலன்புரித் நிவாரணத் தொகை மூன்று மடங்காக மேம்படுத்தப்பட்டுள்ளன. பயனாளிகளின் எண்ணிக்கை 24 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளன. அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் தனியார் துறையினருக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதற்கான திட்டத்தை முன்வைக்கிறேன். எனவே, பாரம்பரிய அரசியலை கைவிட்டு எம்மோடு இணையுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அழைப்பு விடுக்கிறேன். அதேபோல், நாட்டிலிருக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாத்து புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஆதரவளிக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

=

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தலில் எமது வேட்பாளரே வெல்வார்

## மே நாளில் மகிந்த நம்பிக்கை

ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளரே வெற்றிபெறுவார். ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என்று பொதுஜனபெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜனபெரமுனவின் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் பொது மேதினம் என்ற தொனிப்பொருளில் கொழும்பு கம்பல் மைதானத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட கட்சியின் அங்கத்தவர்கள் தொழிற்சங்கத்தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றிருந்தனர்.

சமய வழிபாடுகளை அடுத்து, கலைநிகழ்வுடன் கூட்டம்நடைபெற்றிருந்தது. கட்சியின் தொழிற்சங்கங்கத் தலைவரான காமினி லொக்குகேவினால் மே தின யோசனைகள் முன்வைக்கப்பட்டதோடு பின்னர் உறுதிமொழிகளும் எடுக்கப்பட்டன. நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளராக பதவியேற்றதன் பின்னர் நடைபெறுகின்ற முதலாவது மேதினம் இதுவென்பதோடு பஸில் ராஜபக்ச, சமல் ராஜபக்ச, தம்மிக்க பெரேரா ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

அங்கு மகிந்த மேலும் தெரிவித்ததாவது:

உங்களுக்கு நன்கு தெரியும். எம் மீது சேறுபூசி, எம்மை திருடர்களாக்கி, இந்த நாட்டின் எதிர்காலத்தினை இல்லாதொழிப்பதற்கு பல்வேறு சக்திகள் ஒன்றிணைந்துள்ளன. அந்த அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு நாட்டின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்துவதற்கு எம்மால் முடியும் என்பதை நாம் உங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றோம்.

நண்பர்களே வரலாற்றை ஒரு தடவை மீளவும் பாருங்கள். அதிகாரம் இல்லாத சந்தர்ப்பங்களிலும் சரி, அதிகாரம் இருக்கின்ற சந்தர்ப்பங்களிலும் சரி நாம் தொழிலாளர்களுடன்தான் இருக்கின்றோம்.

அன்று தொழிலாளர் தளங்களிலும், வீதிகளிலும் தொழிலாளர்களின்போராட்டங்களுக்கானமுழுமையான ஆதரவினை நாம் அதிகபட்சமாக வழங்கியுள்ளோம் என்பதை நினைத்துப்பாருங்கள்.

சிலருக்கு தொழிலாளர்கள் தினத்தில் மட்டும் தான் தொழிலாளர்கள் நினைவுக்கு வருகின்றார்கள். இந்த நாடு 16 ஆயிரம் இளைஞர், யுவதிகளை இழப்பதற்கு காரணமாக இருந்தவர்களே தற்போது தொழிலாளர்கள் பற்றி பேசுகின்றார்கள்.

இந்த நாட்டின் அரச சொத்துக்களை அழித்தவர்கள், தீ மூட்டி எதிர்த்தவர்கள், அதேபோன்று நாடு வீழ்ச்சி அடைந்தபோது தப்பிச்சென்றவர்கள் இவ்வாறானவர்கள் தான் தற்போது அதிகாரத்துக்கான ஆடைகளை தயார்படுத்தி வைத்துக்கொண்டுள்ளனர்.

இவர்கள் அரசாங்கத்தினைப் பற்றி எப்போதாவது நல்லது கூறிக் கண்டிருக்கின்றீர்களா. இவர்கள் விமர்சனங்களைச் செய்வார்கள். இல்லாது விட்டால் ஆர்பாட்டங்களையே செய்வார்கள். அவ்வித மானர்களும் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அந்தக்காலத்தினை அவர்களும் மறந்து விட்டார்கள். நாங்களும் மறந்து விட்டோம். அவர்களால் எதனையும் செய்து காண்பிக்க முடியவில்லை. வாய்ச்சவடால் மட்டுமே விடுக்க முடிந்தது.

அவ்விதமான தலைவர்களுக்க கொள்கைகளே கிடையாது 1988/1989களில் கொலை செய்தமைக்காக தற்போது சிலர் மன்னிப்புக்கோருகின்றார்கள். எமக்கு பாடம்கற்பிப்பதாக எண்ணி எமது கட்சியின் செயலாளரை ஜனாதிபதியாக மாற்றினார்கள்.

தற்போது அந்த அம்மையார் பகிரங்கவெளிக்கு வந்து தான் செய்தது தவறான செயல் என்று கூறி மன்னிப்புக்கோருகின்றார். இந்தச் செயற்பாடுகளால் தான் நாடு பின்னோக்கிச்சென்றது.

ஶ்ரீலங்கா பொதுஜனபெரமுனவுடன் மேலும் பல அமைப்புக்கள் கைகோர்க்கும் என்று நாம் நம்புகின்றோம். ஆகவே இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கதாகும். தேர்தலுக்கு பின்னர் நாடு எதை நோக்கிச் செல்லும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். அதற்காகவே வாக்களிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளரே வெற்றிபெறுவார். ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என்று நான் உங்களிடத்தில் கோருகின்றேன் என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்வதாகவும் உறுதி அளித்தார்.

ஏனைய பிரதான சிங்கள வேட்பாளர்களான ரணில், அநுர ஆகியோரிடம் தமிழர்களுக்கான தீர்வை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஜனாதிபதி தேர்தலை பொதுவாக்கெடுப்பாக கருதி வடக்கு கிழக்கில் பொது வேட்பாளரை நிறுத்த தமிழ்கட்சிகளுக்கு உரிமை உண்டு! ஆனால் கடைசி நேரத்தில், ஒரு பெரும்பான்மை வேட்பாளருக்கு 2ஆம் விருப்பு வாக்கை வழங்க முடியும் என்று விக்கினேஸ்வரன் தனது உரையில் கூறியுள்ளார். அந்தக் கூற்றானது சந்தேகங்களை ஏற்படுத்துவதோடு பொது வேட்பாளர் கோசத்தை மலினப்படுத்துகிறது. ஆனால் பொது வேட்பாளர் விடயத்தில் தென்னிலங்கை தமிழர்களை சேர்க்காதீர்கள். அது வேறு தளம். வடக்கு, கிழக்கு இது வேறு தளம் என்பதுதான் எனது நிலைப்பாடாகும்.

நான் வரலாறு முழுக்க மலையகத்தில் உரிமைக்கு குரல் கொடுத்து, வடகிழக்கில் உறவுக்குகரம் கொடுத்துள்ளேன். அதனடிப்படையில் தான் கிளிநொச்சிக்கும் எனது கரம் நீட்டுவதற்கு வருகை தந்துள்ளேன்.

தற்போது, வடகிழக்கில் பெரும்சாவாலான விடயமாக காணப்படுவது இளைய தமிழ் தலைமுறை நாட்டை விட்டு வெளியேறுவதாகும். இதனால் தமிழர் சனத்தொகை குறைகிறது. இது ஆபத்தானது.

கடந்த காலங்களில் மலையக தமிழர்கள் கிளிநொச்சி, முல்லை, வவுனியா, மாவட்டங்களில் வந்து குடியேறினார்கள். அன்று அவர்கள் இங்கே வராமல் இருந்திருந்தால் தற்போது வடக்கு, கிழக்கு தமிழர் சனத்தொகை கணிசமாக குறைந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எதிர்காலத்தில் மலையக தமிழர் வன்னியில் வந்து குடியேறமாட்டார்கள். அவர்களுடைய வாழிடங்களில் அம்மக்களுக்கான கட்டமைப்பை தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்படுத்தி வருகிறது. ஆகவே வடக்கிலும், கிழக்கிலும் தமிழர் சனத்தொகை குறையாமல் பாதுகாத்து கொள்ளுங்கள். அது மிகவும் அத்தியாவசியமான விடயமாகும்.

அதேநேரம், தற்போதைய தமிழரசுக்கட்சியின் நிலைமையைக் கண்டு கவலை அடைகிறேன். நீங்கள் இங்கு(வடக்கு,கிழக்கில்) பலமாக இருந்தால் தான் நாம் அங்கே(வடக்கு,கிழக்குக்குவெளியே) பலமாக இருப்போம்.

இதை நான் 20வருடங்களுக்கு முன் இங்கு வந்து சொன்னேன். 10 வருடங்களுக்கு முன்பும் இங்கு வந்து சொன்னேன். தற்போதும் சொல்கிறேன் நீங்கல் பலமடையும் வரையில் நான் கூறிக்கொண்டே இருப்பேன் என்றார்.

## ரூ. 1700....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆறுமுகன் தொண்டமான் மறைந்தபின்னர் எம்மால் மேதினக் கூட்டம் நடத்த முடியவில்லை. கொரோனா, பொருளாதார நெருக்கடி என்பவற்றை எதிர்கொள்ள நேரிட்டது. இ.தொ.க முடிந்து விட்டதா என கேள்வி எழுப்பினார்கள். 4 வருடத்தின் பின்னர் பெரும் மேதின கூட்டமொன்றை நடத்துகின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த 4 வருடங்களாக பல்வேறு அவமானங்களையும் பிரச்சினைகளையும் சந்தித்திருக்கிறோம்.

எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம். இந்தமாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்கும் என்றார்.

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் மே தினப் பிரகடனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இணைந்த வடக்கு, கிழக்கு, தமிழர் தாயகம், தமிழர் தேசத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றை வலியுறுத்தும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் வவுனியா குருமன்காடு கலைமகள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஊடகப்பேச்சாளர் கனரத்தினம் சுகாஸ் உள்ளிட்டவர்கள் பங்கேற்றதோடு, இனப்படுகொலைக்கான குற்றவியல் விசாரணை, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி, பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம், அரசியல் கைதிகள் விடுதலை, இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தல், முன்னாள் போராளிகள் மீது 15 வருடங்களாக தொடரப்படும் விசாரணை நிறுத்தப்பட வேண்டும் ஆகிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

அதன் பின்னர் பிரகடனமும் நிறைவேற்றப்பட்டது. அதில் சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் 2024 மே தினத்தில் வலியுறுத்திக் கூறும் விடயங்களாக பின்வருவன பிரகடனப் படுத்தப்பட்டள்ளது,

» தமிழ்மக்கள் 75 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் - அதனுடைய தனித்துவமான இறைமையையும் - சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக்கூடிய 'சமஸ்டி' அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் கோருகின்றோம்.

» தமிழ் மக்கள் - காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த்தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது ஒற்றையாட்சிக்குட்பட்ட வேறு எந்தவொரு தீர்வையோ தமிழினம் நிராகரிக்கிறது.

» அந்த நோக்கில் தமிழர்களது நீண்டகால அரசியல் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் நிலையை உருவாக்குவதற்கு ஏதுவாக ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தும் முகமாக, நடைபெறவுள்ள சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும் நிராகரிக்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

» தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்படவேண்டும்.

» இனவழிப்பு யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு ஈழத் தமிழ்த் தேசத்தை, போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனம் செய்து, அத்தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான விசேட நிதியேற்பாடுகள் செய்யப்படவேண்டும். அத்துடன் குறித்த செயற்திட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், முன்னாள் போராளிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் போன்றோர் உள்வாங்கப்பட்டு அவர்களின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

»பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும்.

»அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலையை வலியுறுத்துவதோடு,

»தமது உரிமைகளுக்காக போராடும் தரப்புக்களை சிறைக்குள் தள்ளி - அச்சுறுத்தி, உரிமைகளை நசுக்க ரணில் அரசால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தையோ அல்லது அதனையொத்த எந்தவொரு சட்டத்தையோ முற்றாக எதிர்க்கின்றோம்.

»ஊடக சுதந்திரத்தையும் கருத்துச்சுதந்திரத்தையும் நசுக்கும் நோக்கில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச்சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

»சட்டத்திற்கு புறம்பான கொலைகள் நிறுத்தப்படல் வேண்டும்.

»வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

»தமிழ்த் தேசத்தின் விவசாயிகள், மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். அவர்களுக்குரித்தானநிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்கள் ஒன்றுபட்டு செயற்படக் கூடிய அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

» தோட்டத் தொழிலாளர்களது உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

» கடற்தொழிலாளர்கள்; தமது கடற்தொழிலை தத்தமக்குரிய கடற்பரப்பில் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்படவேண்டும். தென்னிலங்கை மீனவர்களது அத்துமீறிய மீன்பிடிச்செயற்பாடுகள் தடுக்கப்படல்வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கான உதவிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் கடற்தொழிலாளர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும். வெளிநாட்டு மீனவர்கள் எமது கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படக்கூடாது. எமது கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்தியமீனவர்களது நடவடிக்கைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

» அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் அதிகாரங்களைப் பறிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உடன்நிறுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அந்த அலுவலகத்திற்கு கணக்காளர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும் என்பன அவையாகும்.

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழர்களாகிய நாம் எமது இனத் தேசிய விடுதலைக்காகப் போராடிக்கொண்டே சமநேரத்தில் எமது தொழிலாளர்களின் விடுதலைக்காக வும் போராட வேண்டிய சவால்களைச் சந்தித்து நிற்கின்றோம். வடிவங்கள் வேறுபட்ட போதும் வேறுபடாத ஒடுக்குமுறைச் சித்தாந்தம் இலங்கை அரசினால் தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டே வருகிறது.

ஆயுதவழிமுறைகள் அமைதியடைந்த போதிலும் கட்டமைக்கப்பட்டதும் கட்புலனாகாததுமான இன அழிப்புப் போர் தமிழர் தேசத்தில் ஆழமாக குவியச்செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழரின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு பூர்வீக மண்ணில் சிங்கள பௌத்த மரபுரிமை தொன்ம ஆக்கிரமிப்புகள் ஊடாக ஒரு பண்பாட்டுப் போரினை எம்மீது சிங்களதேசம் ஏவிவிட்டிருக்கின்றது. இது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசை ஆகிய தமிழ்த்தேசியத்தை அழித்துவிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட செயல்முறையாக நீட்சி பெற்று வருவது வேதனை தருகிறது.

உழைப்பினால் பெறப்படுகின்ற வெகுமானங்களை மாத்திரமன்றி வாழ்வியலின் அடிப்படை உரிமைகளையே இழந்துநிற்கின்ற துர்ப்பாக்கியநிலை உருவாகியுள்ளது. தமது வாழ்வுரிமைக்காக, சுதந்திரத்துக்காக போராடுகின்ற எமது மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துணைகொண்டு ஆட்சியாளர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றனர். மதச்சார்பற்ற இலங்கை என்ற அரசியல் அமைப்பின் வாசகத்தை மறுத்து பன்மைத்துவத்தைப் புறக்கணித்து, இலங்கைத்தீவை பௌத்தசிங்களநாடுஎனநிறுவுவதில் சிங்கள அரசுகள் மிக இறுக்கமாகவே செயற்பட்டு வருகின்றன.

தமிழர் மரபுரிமைகளைச் சிதைத்து, தொன்மங்களைத் தோண்டியெடுத்து ஈழத்தமிழ் வரலாற்றை இல்லாதொழிப்பதில் அரச கட்டமைப்புகள் அதிகாரபூர்வமாக செயற்பட்டுவருகின்றன. மிகப்பெரும் இனப்படுகொலையை சர்வதேசம் பார்த்திருக்க ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்திய பின்பும், தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை ஆழ ஊடுருவி அகற்றிவிடுவதில் பௌத்த சிங்கள பீடம் அதிகூடிய கரிசனை செலுத்தி வருகிறது.

உழைப்பாளிகளாகிய தங்களின் பிள்ளைகளும், கணவன்மாரும், உறவுகளும் ஆயிரக்கணக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் அந்தப் பெற்றோரின் நெடுநாளைய போராட்டங்களுக்கு பெறுபேறுகள் எவையும் கிட்டவில்லை. சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளால் அவர்களது குடும்பங்கள் உழைப்பாளரை இழந்து பல்லாண்டு காலமாக தவித்து வருகின்றன.

நிலங்களைப் பறிப்பதும், நில வளங்களை அள்ளிச் செல்வதும், கடலினைப் பறிப்பதும், கடல் வளங்களைக் கொள்ளையடிப்பதும் என சிங்கள அரச காரியங்கள் சட்டத்திற்கு முரணாக நிகழ்ந்தேறி வருகிறது. ஊழலும் மோசடியும் சகல நிர்வாகத் துறைகளிலும் நிறைந்து போயிருக்கிறது. மனிதாபிமானப் பார்வைகள் இன்றி பக்கச்சார்புகளாலும் முதலாளித்துவ மேலாண்மைகளாலும் இலங்கைத்தீவு மலிந்து நிறைந்து போயுள்ளது.

குறிப்பாக, முப்படை பலமும், சர்வதேச நெருக்க நிலை உறவும், அணிசேரா கொள்கையும் கொண்டிருப்பதாக தம்பட்டம் அடிக்கும் சிங்கள அரசு, சர்வதேச போதைப்பொருள் வர்த்தகத்தின் களமாக இலங்கையைத் திறந்து விட்டிருக்கிறது. வன்முறை மேலோங்கி பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து சனத்தொகையில் சரிநிகராய் இருக்கும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாக் கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படும்

தொடர்ச்சி 10ம் பக்கம்....

## இந்தியாவின்....

(ஒன்பதாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகத்துறை பொருளாதாரப் பலம் மிக்கவர்களாலும், அரசியல் வன்பலத்தாலும் சீரழிந்துபோயுள்ளது. அஞ்சுவதும் அடிபணிவதும் அரசியல்; துதி பாடுவதும் ஊடகப் பண்புகளாக புதிய வடிவம் பெற்றிருக்கிறது. மொத்தத்தில் பொருளாதார கட்டமைப்புகள் சீர்குலைந்து, வாழ்வின் வசதிகள் வலுவிழந்து, வருமானம் குறைந்து வறுமை மேலோங்கி முடங்கிய வாழ்வில் எம் தேசம் சிக்கித் தவிக்கிறது.

மானியங்களும், நிவாரணங்களும் உழைக்கும் மக்களின் உயர்வைக் கட்டுப்படுத்தும் அன்பளிப்புகளாக அரசால் வழங்கப்படுகிறது. மொத்தத்தில் பொருளாதார சிறப்புமின்றி, அரசியல் சீர்திருத்தமுமின்றி, தமிழர் வாழ்வில் சுயாட்சியுமின்றி தமிழர்களின் தேசிய வாழ்வு சிங்கள தேசத்தால் காவு கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய நிர்மூலமான சூழ்நிலையில் அயலக இந்தியாவும், அனைத்துலக நாடுகளும் தமது மனச்சாட்சிக் கதவுகளை இறுகமூடி அமைதிகொள்வது ஈழத்தமிழர்களை ஆழமான வேதனைக்கு இட்டுச்சென்றுள்ளது. தமிழ்த் தேசிய இனம் தமது வாழ்வுரிமையை வென்றெடுப்பதற்கு இத்தகைய ஒடுக்குமுறைச்சூழல்களின் மத்தியில் தொடர்ந்து போராடும் சக்தியை புதுப்பித்துக் கொள்வதே இன்று எம்முன் உள்ள ஒரே வழியாகும்.

எமது இனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம்செய்த கல்லறை மேனியர்களை நெஞ்சங்களில் நினைவு கூர்ந்து, அந்த சத்திய இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடுவதே தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு ஒரே வழியாகும் என்று இந்த மே நாளில் நாம் பிரகடனம் செய்கின்றோம்.

தமிழர் இருப்பை அழித்து, பௌத்த சிங்கள மேலாதிக்கத்தைத் திணித்து பூர்வீக நிலத்தையும், பண்பாட்டு வாழ்வியலையும் அழிக்க நயவஞ்சகத்தோடு ஆட்சி புரியும் சிங்களப் பேரினவாத கருத்தியலுக்கு எதிராக இங்கு கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்களும், மக்களும் இணைந்து எமது தேசியத் தந்தை - தந்தை செல்வா அவர்கள் வகுத்த பாதையில் மரபுவழித் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற உன்னத இலட்சியங்களுக்காக இல்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் அணிதிரண்டு போராடி, எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, எமது இனத்தின் உரிமையை அடைந்தே தீருவோம் என திடசங்கற்பம் பூணுகிறோம் என்றுள்ளது.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவேட்பாளர் தேர்தலில் நாம் தேர்தலில் வெல்ல போட்டியிடவில்லை. பின் எதற்காக என்றுகேட்டால் எமது நிலையை எமது மக்களுக்கும் மற்றையோருக்கும் தெளிவுபடுத்தவும் மக்கள் தீர்ப்பு ஒன்றை வடகிழக்கு மாகாணங்களில் பெற ஆவன செய்யவுமே தான் இந்த ஏற்பாட்டை வலியுறுத்துகின்றோம்.

ஐ.நா வினால் வடகிழக்கு மாகாணங்கள் மக்கள் தீர்ப்பிற்கு விடப்பட்டால் மக்களின் மனதில் என்ன உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். முன்னைய தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றவாறு தமிழர்களாகிய நாம் எமது வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து சில போராட்டங்களில் ஈடுபட வேண்டும். வன்முறை தேவையில்லை. பட்டினி கிடக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பொது வேட்பாளரை முன் நிறுத்தி எமது தமிழ்ப் பேசும் உறவுகளை ஒன்றிணைத்து எமக்கென உலக அரங்கத்தில் சில நன்மைகளைப் பெற முயற்சிப்பதே இந்தப் போராட்டம். அவ்வாறான ஒரு போராட்டவழிமுறையாகவே தமிழ்பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் முன்னிறுத்தும் செயல் அமைகின்றது.

தக்க பொதுவேட்பாளர் ஒருவரை நாம் முன்னிறுத்தினால் அவர் மும்மொழிகளிலும் எமது வரலாறு பற்றி, எமக்கிழைக்கப்பட்ட அநியாயங்கள் பற்றி, இன்னல்கள், பாகுபாடுகள் பற்றி உலகுக்கு எடுத்துரைத்து எமது வடக்குகிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை ஐக்கிய நாடுகள் நடத்தக்கூடிய தகுந்த மக்கள் வாக்கெடுப்பின் மூலம் வெளிக் கொண்டுவர முடியும் என்ற கருத்தை நிலைநாட்டமுடியும்.

பலர் பொதுவேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று அஞ்சுகின்றார்கள். அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்துவிட்டு 2ஆம் 3ஆம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க முடியும்.

இதன் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை பேணப்படும். எமது எதிர்பார்ப்புக்கள் உலகறியச் செய்யப்படும். அதேநேரத்தில் எமது தனிப்பட்ட விருப்புவெறுப்புகளுக்கும் இடமளிக்கப்படும். இவ்வாறு செய்வதால் இனக்கலவரங்கள் வெடிக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படாது என்றார்.

## ஏற்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளையோர் அமைப்பு, புரட்சிகர மாணவர் ஒன்றியம் ஆகிய தரப்பினரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அஸ்வசும வழங்குவதற்கு முயற்சிக்கின்றார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவுள்ளதாகவும் செய்தி அனுப்புகின்றார்.

தொண்டமானுடன் பெருந்தோட்டத் தொழிலாளரை ஏமாற்றுவதற்காக இன்றையதினம் அங்கு சென்றிருந்தார். இந்தப்பொருளதார பேரழிவை இத்தகைய சிறிய சலுகைகள் மூலம் தீர்க்க முடியாது.

பஸில் பொதுத் தேர்தலை விரும்புகின்றார். ரணில் இன்னமும் அதற்குத் தயாரில்லை. எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலை எதிர்பார்த்துள்ளது. தேசிய மக்கள் சக்தியும் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகியுள்ளது.

ஜனாதிபதிதேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற சந்தேகம் ஒருபக்கம் இருக்கையில் அரசமைப்பின் பிரகாரம் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும்.

பொதுத்தேர்தல் அதற்கு முன்னதாக நடைபெறும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்தமுடியுமா என்ற கேள்வியும் உள்ளது. தேர்தல் நடைபெற வாய்ப்புக்கள் அதிகமுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சி என்றவகையில் நாம் தேர்தல்களில் போட்டியிடுவோம். போராட்டகளத்தில் பிரதிபலிக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக வைத்து அவற்றை முன்னெடுப்பதற்கான பிரதிநிதிகளை நாம் அரசநிறுவனங்களுக்கு அனுப்புவதற்காகப் போட்டியிடுவோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

## முன்னிலை சோஷலிசக் கட்சியின் மே தினம்





## ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினம்





## பொது ஜன பெரமுனவின் மே நாள்





## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மே தினம்







## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே நாள்





## ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் மே தினம்





## சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினம்



## தேசிய மக்கள் சக்தியின் மே தினம்





## ஐக்கிய தேசியக் கட்சியின் மே நாள்







காலைக்கதிர் Kalaikkathir

# உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களை பதிவு செய்துகொள்வது மிக மிக அவசியம்



(எஸ்.அஷ்ரப்கான்)

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சகல இடங்களிலும் உள்ள விடுதிகள், ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் அதனைக்கையாளும் நிறுவனங்கள் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.உவைஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள விடுதிகள், ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவு உற்பத்தி செய்யும் சகல நிறுவனங்களும் அதனைக் கையாளும் நிறுவனங்களும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். அத்துடன் உணவுகளை தயாரிப்பவர்களும் அதனைக் கையாளுபவர்களும் மேற்குறித்த திகதிக்கு முன்னர் கட்டாயமாக மருத்துவச் சான்றுதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உரியகாலத்துக்குள்பதிவுசெய்தல்மற்றும்மருத்துவச் சான்றுதழினைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் மேலும் தெரிவித்தார். (05)

# அம்புலன்ஸை வழிமறித்து யானைகள் அட்டகாசம்



வவுனியா, செட்டிகுளம் ஊடாக மன்னார் செல்லும் பிரதான வீதியில் நோயாளர் அம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்களை வழிமறித்து வீதிக்கு வந்த யானைகள் வீதியை குறுக்கறுத்து அட்டகாசம் செய்துள்ளன.

செட்டிகுளம், பறயனாளங்குளம் பகுதியிலேயே இந்தச் சம்ப வம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற் றுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக யானைகள் வீதியில் நின்று போக்கு வரத்துக்கு இடையூறு செய்து வருகின்றன என அவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் தெரிவித் துள்ளனர்.

கடந்த ஓரிரு நாள்களுக்கு முன்னர் இதே பகுதியில் பலமின்கம் பகளை உடைத்து யானைகள் சேதமாக்கியிருந்தன.

இந்நிலையில், நோயாளர்களை ஏற்றிவந்த அம்புலன்ஸையும் வழிமறித்ததுடன் நீண்ட நேரமாக போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் நின்று பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இவ்வீதியூடாக பயணிப்பவர்களும் அண்மித்து உள்ளகிராமவாசிகளும் யானைகளால் உயிர் அச்சுறுத்தலுடனேயே வாழ்ந்து வருகின்றனர். (05 - 100)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான

# சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்கமுடியாத அதிகாரிகளை பணி நீக்கம் செய்யுங்கள்

## முன்னாள் நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி காட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்).

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 5 வருடங்கள் கழிந்தும் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாத அதிகாரிகளை உடனடியாக பணிநீக்கம் செய்யவேண்டும் என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் அந்த அறிகையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

270 பேர் கொல்லப்படுவதற்கும் 500 இற்கும் மேற்பட்டவர்கள் ஊனப் படுத்துவதற்கும் கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்படுவதற்கும் இன முறுகளை ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்த ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை இதுவரை கண்டுபிடிக்க முடியாத பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை ஏன் சேவையில் வைத்துள்ளீர்கள்? அவர்களுக்கு ஏன் மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் வழங்குகின்றீர்கள் என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளார்.

இந்தத் தாக்குதலின் காரணமாக எந்த சம்பந்தமும் இன்றி முஸ்லிம்களும் கத்தோலிக்க கிறிஸ்தவ அப்பாவிகளுமே பாதிக்கப்பட்டார்கள்.

நாட்டிற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய இந்த குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்க முடியாத அதிகாரிகள் அரச பணிக்கே தகுதி அற்றவர்களாவர்.

எனவே சம்பந்தப்பட்ட பொலீஸ் மா அதிபர், பிரதி பொலீஸ் மா அதிபர்கள், புலனாய்வுத் துறையினர் போன்ற அனைவரையும் ஜனாதிபதி உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும். அல்லது ஜனாதிபதியும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என வும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள் ளது.(05)

# யாழில் பரிதாபமாக உயிரிழந்த மாணவன்

## வெளியான காரணம்

யாழ்.சுன்னாகத்தில் மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்ட, மாணவன் ஒருவர் திங்கட்கிழமை திடீரென உயிரிழந்துள்ளார்.

சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம் பகுதியை சேர்ந்த சிறீதரன் சுஜிதரன் (வயது 19) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த மாணவனுக்கு கடந்த 27 ஆம் திகதி மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்ட நிலையில் இணுவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அடுத்த நாளான 28 ஆம் திகதியும் இணுவில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு சிகிச்சை பெறுவதற்கு சென்றவருக்கு திடீரென உடல் மேலும் சுகவீனம் அடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந் துள்ளார் எனவைத்தியர்கள் தெரிவித் துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபா லசிங்கம் மேற்கொண்டார்.

மிகைப்படுத்தப்பட்ட இதயத் தசை வளர்ச்சியாலேயே குறித்த மரணம் நிகழ்ந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந் துள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# காலாவதியாகின பொருள்கள் விற்ற கடைக்கு 80 ஆயிரம் ரூபாய் தண்டம்

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையங்களில் கடந்த 15.03.2024 ஆம் திகதி திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதுதிகதிகாலாவதியானபொருள்கள், வண்டு மொய்த்து பழுதடைந்த பொருட்கள், சுட்டுத்துண்டு உரிய முறையில் இடப்படாத பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பலசரக்கு விற்பனை நிலைய உரிமையாளர் இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து உரிமையாளரிற்கு எதிராக 18.03.2024 ஆம் திகதி மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு செவ்வாய்;க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் செ. லெனின்குமார் உரிமையாளரிற்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் அறவிட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத் தார்.

(05)

# யாழில் கடற்றொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

யாழில் மீன் பிடிக்க சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புங்குடுதீவு பகுதியை சேர்ந்த கதிரவேல் சுப்பிரமணியம் (வயது 64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோ தனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ள நிலையில், ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.(05)

# குளியாப்பிட்டியில் 31 வயது இளைஞர் கடத்தல்; காதலியின் பெற்றோர் உட்பட நால்வர் கைது!

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கடத்தல் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் வெலிமட - கெப்பட்டிபொல பகுதியைச் சேர்ந்த 42 மற்றும் 24 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பிரதான சந்தேக நபர்களான குறித்த இளைஞரின் காதலியின் 72 வயது தந்தையும் 69 வயது தாயாரும் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டிய - வெரலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 22 ஆம் திகதி அன்று தனது காதலியைச் சந்திப்பதற்காக காதலியின் வீட்டிற்குச் சென்றிருந்த போதே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும் இந்த இளைஞர் தொடர்பில் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வாரியபொல விபத்தில் பெண் பலி : குழந்தை உட்பட நால்வர் காயம்!

குருணாகல் - புத்தளம் பிரதான வீதியில் வாரியபொல பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன் குழந்தை உட்பட நால்வர் காயமடைந்துள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குருணாகலில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த வேன் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கால்வாயில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது வேன் சாரதி மற்றும் வேனில் பயணித்த மூன்று பெண்களும் சிசுவும் காயமடைந் துள்ள நிலையில் நிக்கவரெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டபின்னர் பெண்ணொருவர் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மேதின ஊர்வலமும் கூட்டமும் வவுனியாவில்






உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம், நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம் எனும் தொணிப்பொருளில் புதியஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நேற்று காலை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியாதமிழ்மத்தியமகாவித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய மேதின ஊர்வலம் பஜார்வீதி ஊடாக வவுனியா நகரமண்டபத்தை அடைந்தது, அங்கு பிரதான மேதினக்கூட்டம் இடம்பெற்றது.

இம்முறை மேதினப்பேரணியில் உணவுப் பொருள்கள்எரிபொருள்களின்விலைகளைக்குறை, ஐஎம்எவ் ஆலோசனைகள்- நிபந்தனைகளால் நாட்டின்உற்பத்திப்பொருளாதாரத்தைநாசமாக்காதே, வற் வரி, மின்சாரம் உள்ளிட்ட கட்டணங்களின் அதிகரிப்பைஉடன்குறை,அந்நியக்கம்பனிகளுக்கும், பெருமுதலாளிகளுக்கும்வழங்கும்வரிச்சலுகையை உடன் நிறுத்து,தேசிய இனங்கள் மீதான பேரினவாத ஒடுக்கு முறைகளை உடன் நிறுத்து, தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்களின் சுயாட்சி உரிமைகளை வழங்கு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.

குறித்த பேரணியில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்ததுடன் அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியிருந்தனர். (05-100)

# ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணியின் மே தின நிகழ்வு மானிப்பாயில் நடந்தது



ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணியின் மே தின நிகழ்வு நேற்று (புதன்கிழமை) மானிப்பாய் பிரதேச சபையின் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. 'அரசின் அடக்குமுறைகளைஉடைத்தெறிவோம்' என்னும் தொனிப்பொருளில் இந்த தொழிலாளர்தினநிகழவுநடைபெற்றது.

நிகழ்வு காலை 9.45 மணியளவில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தலைமை உரை, விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன.



மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான திருமதி செல்வி அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயகபோராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா குகதாஸ், கஜதீபன், ரெலோவின் பேச்சாளர் குருசாமிசுரேந்திரன், முன்னாள்பிரதேச சபையின் உறுப்பினர்கள், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (05)

# உழைப்பால் உயர்ந்தவர்கள் உழைப்பாளிகளை கௌரவித்த மே தின நிகழ்வுகள் சாய்ந்தமருதில்








(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது- மாளிகைக்காடு வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்த உழைப்பாளிகளை உழைப்பால் உயர்ந்தவர்கள் கௌரவிக்கும் மே தின நிகழ்வு வர்த்தக சங்க தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம். முபாறக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக முன்றிலில் நேற்று (புதன்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டட்து.

நேற்று முழுநாளும் தொழிலாளிகளை கொண்டாடும் விதமாக வடிவமைக்கப்பட்ட உழைப்பாளிகளை உழைப்பால் உயர்ந்தவர்கள் கௌரவிக்கும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.எம். சம்சுதீன், சிரேஷ்ட வர்த்தகர் ஆதம்பாவா மீராசாஹிப், சிரேஷ்ட கல்விமான் ஏ.எல்.எம்.பஷீர், சாய்ந்தமருது- மாளிகைக்காடு வர்த்தக சங்க நிர்வாகிகள், வர்த்தகர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சுகாதார பிரிவின் ஊழியர்கள், திண்மக்கழிவகற்றல்பிரிவின்ஊழியர்கள்சகலருக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை பாராட்டி இதன்போது பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பொத்துவில் பிரதேசத்தில் முழுநாளும் தொழிலாளிகளை கௌரவிக்கும் வகையில் சாய்ந்தமருது- மாளிகைக்காடு வர்த்தக சங்கம் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.(05)

# சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர்சங்க உலக தொழிலாளர் தின முழு நாள் நிகழ்வு



(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர்சங்கத்தின் ஏற்பாட்டில் உலக தொழிலாளர் தின முழு நாள் சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம். எஸ். எம்.முபாறக் தலைமையில் இடம்பெற்றது.

'உழைக்கும் வர்க்கத்துக்கு, உழைப்பால் உயர்ந்தவர்களின் கௌரவம்' எனும் தொனிப்பொருளில், இடம்பெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேசசெயலாளர் ஏ. ஆசிக், கல்முனை மாநாகரசபைஆணையாளர்ஏ.எல்.எம். அஸ்மி, சாய்ந்தமருதுபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி யூ.எல். சம்சுதீன், வர்த்தக பிரமுகர்கள், தொழிலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தொழிலாளர் தினத்தை தொழிற் சங்கங்கள் அனுஷ்டித்து வரும் நிலையில், தம்மிடம் தொழில் புரியும் ஊழியர்களை கௌரவிக்கும்

முதற்கட்ட நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுத்திகரிப்பு ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது முபாறக் முன்றிலில் இடம் பெற்றது.

இதன் போது முபாறக்ஸ் ஸ்தாபனத்தின்ஸ்தாபகர்மீராசாஹிப்ஹாஜியாரின் பங்குபற்றுதலுடன், பிரதேசசெயலாளர், மாநகர ஆணையாளர், வர்த்தக தொழிலதிபர்கள் உட்பட ஊழியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

என்றுமில்லாதவாறு அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடி தொழிலாளர்கள் தினத்தை கொண்டாடுவதை இந்த பிராந்தியத்தின் முன்மாதியானதாக இருந்ததோடு பலரது பாராட்டை யும் பெற்றது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

## கெப் மோதி வயோதிபர் வென்னப்புவயில் சாவு!

நீர்கொழும்பு - சிலாபம் பிரதான வீதியில் வென்னப்புவ பகுதியில் இடம்பெற்றவீதிவிபத்தில்வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தவிபத்துசெவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வென்னப்புவபகுதியைச்சேர்ந்த 71வயதுடையவயோதிபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கிப் பயணித்த கெப் வண்டி ஒன்றுவீதியில்சென்றுகொண்டிருந்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்துகெப்வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## மே தினம் இருந்தும் நாங்கள் தொழில்செய்து வருகின்றோம்! பெண்களின் ஆதங்கம்



( எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலைதம்பலகாமம் பத்தினிபுரக் கிராமத்தில் பனை ஓலை கைத்தொழிலில் 48 பெண் தொழிலாளர்கள்இன்றும்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தொழில் ரீதியாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தாம் தொழில் செய்து வருவதாக பெண்கள் கூறுகின்றனர்.

இந்ததொழிலாளர்தினத்திலாவது எங்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டும்என்றுஎதிர்பார்க்கின்றனர்.

பத்தினிபுரம் பனையோலை சார்ந்த உற்பத்தி கிராமம் இப்பிரதேச பெண்களின் நலன் கருதி மூன்று வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது.

பிரம்புகள், பித்தளை, மட்பாண்ட், மரப் பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில்மேம்பாட்டுஇராஜாங்க அமைச்சின்உதவியுடன்இக்கிராமப் பெண்களின் நலன் கருதி திறந்து வைக்கப்பட்டது.

எனினும் போதிய வருமானம் பனை ஓலை இல்லாமல் உற்பத்தி பொருள்களின் விலையில் ஏற்படும் மாற்றம் என்பன நமது வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த மே தினத்திலாவது எமக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 25 வருட காலமாக இந்த பனை ஓலை கைத்தொழில் செய்து வருகிறோம். இதில் 48 பேர் வேலை செய்கின்றார்கள்.

பெண்கள் சுய தொழிலாக செய்து கொண்டு வருகின்றார்கள். ஆனால் பனைமரம் இருக்கின்றது பனைஓலைவெட்டுவதற்குஆள்கள் இல்லை.

மழைகாலங்களில் வருமானம் வருவதில்லை.

இந்த மே தினம் அவ்வாறு இருந்தும் நாங்கள் எங்கள் வருமானத்தைக் கூட்டுவதற்காகத் தொழில் செய்து வருகின்றோம்.

இத்தொழில் கணவனை இழந்தவர்கள் விதவைகள் வேலை செய்து கொண்டு வருகிறார்கள்.

அரசாங்கம் உதவிகள் செய்து எமது தொழில் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் எனத் தெரிவித்தனர்.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனையில் மே தினக் கூட்டம்





(எஸ்.அஷ்ரப்கான், றியாஸ் ஆதம்)

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாடுசெய்துள்ள மே தினக் கொண்டாட்டம் அட்டாளச்சேனை சந்தை சதுக்கத்தில் இடம்பெற்றது.

போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடவியலா ளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் (ஜே.பி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில், விசேட அதிதியாக அக்கரைப்பற்று ஹல்வானி பேக்கரியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் தொழிலதிபருமான எஸ்.ஏ.எம்.சித்தீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் விசேட துஆ பிரார்த்தனை மற்றும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பயன்தரும் மரங்கள், கற்றாளைக்கன்றுகளும் சகலருக்கும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# சுன்னாகம் லியோ கழக உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு!






சுன்னாகம் லியோ கழகத்தில் புதிஸ்ரீதாகஇணைந்தஉறுப்பினர்ளுக்கு சின்னஞ் சூட்டலும் சான்றிதழ்கள் வழ்கிவைப்பும் பழைய அங்கத்தவர்களுக்கு உறுப்புரிமை சான்றிதழ் வழங்கும் நிகழ்;வும் கடந்த திங்கட்கிழமை உடுவில் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சுன்னாகம் லியோ கழகத் தலைவர் லியோ சனோஜிகன் தலைமையில்; நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாட்ட ஆளுநரின் ஆலோசகர் லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆளுநர் மற்றும் சுன்னாகம் லியோ கழகம் என்பவற்றின் ஆலோசகர் லயன் சிஸ்ரீ.ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ், லியோ மாவட்ட உப தலைவர் லியோ லக்ஷிகா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.(05)

# 11 கஜமுத்துக்களுடன் கைதான சந்தேக நபர் விசேட அதிரடிப்படை மேலதிக விசாரணைகள்!





பாறுக் ஷிஹான்

சுமார்2.5கோடிவிலைமதிக்கத்தக்க யானைகளை கொன்று பெறப்பட்ட அரியவகை 11 கஜமுத்துக்களுடன் கைதான சந்தேக நபர் தொடர்பில் மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்துள்ளதாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 29.04.2024 அன்று மாலை மட்டக்களப்பு மாவட்டம் காந்தி பூங்கா பகுதியில் சந்தேகத்திற்கிடமாக ஒருவர் சட்டவிரோத வியாபார நடவடிக்கை ஒன்றிற்காக வருகை தந்துள்ளதாக கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல் ஒன்றைஅடுத்துமாறுவேடத்தில்அங்கு சென்ற விசேட அதிரடிப்படை குழு கண்காணிப்பில்ஈடுபட்டுசந்தேகநபரை சுமார் 25 கோடி ரூபா பெறுமதியுடைய யானைகளை கொன்று பெறப்பட்ட அரியவகை 11 கஜமுத்துக்களுடன் கைது செய்திருந்தனர்.

பின்னர் கைதான சந்தேக நபர் 30 வயது மதிக்கத்தக்க மயிலவெட்டுவான் பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் சட்டநடவடிக்கைக்காக மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டார்.

மேலும் இந்த நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி. குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட பதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கிஹான் குணரத்ன ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

தற்போது சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# ஊர்காவற்துறை தனியார் நிறுவனத்தால் இலவச உலர் உணவுப்பொதி வழங்கல்

அண்மையில் ஊர்காவற்துறை நகரில் ஆரம்பிக்கப்பட்ட ஆரூத் பூட் சிட்டி நிறுவனம் ஆரம்பித்த சில மாதங்களில் இயன்றளவு உள்ளூர் வேலை வாய்ப்புக்கள், உள்ளூர் உற்பத்திகள், பிராந்திய பெறுமதிசேர் சங்கிலி , இளைஞர்களுக்கான விளையாட்டுத்துறை அபிவிருத்தி, மாணவர்களுக்கானகல்விஉதவித்திட்டங்கள்மற்றும் அதஷ்ட இலாப சீட்டுத் திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது ,

அவற்றில் ஒரு பகுதியாக அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் முன்மொழியப்பட்ட 60 பேருக்கான, தலா ரூ. 5000 பெறுமதியான மொத்தமாக மூன்று லட்சம் ரூபா பெறுமதிமிக்க உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தது .

இந் நிகழ்வில், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் பங்குபற்றி பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தார்கள்.

இந்நிகழ்வானது ,ஆரூத் பூட் சிட்டி நிறுவனத்தின் உரிமையாளர் - சி. சகாய டயானின் தந்தை அமரர் சிங்கராயர் ஞாபகமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்துக்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவு!

## கனேடிய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு வழிவகுக்கக்கூடிய அர்த்தமுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகக் கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.கனடாவிலுள்ள ப்ரம்டன் நகரில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தமிழினப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையிலான சின்னமொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து இலங்கை அரசாங்கம் கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரை வரவழைத்துக் கலந்துரையாடியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதன்படி இந்நினைவுச்சின்னம் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்பொன்று கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷுக்கும், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவுக்கும் இடையில் இடம்பெற்றதாக கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் மின்னஞ்சல் ஊடாகத் தமக்கு உறுதிப்படுத்தியதாக 'தமிழ் கார்டியன்' செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தோடு கனடாவின் சமஷ்டி கட்டமைப்பின்கீழ் மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து வேறுபட்டு சுதந்திரமாக இயங்கமுடியும் எனவும், அவற்றுக்கென தனித்த நிர்வாக அதிகாரங்கள் உள்ளன எனவும் கனேடிய உயர்ஸ்தானிகராலயம் அதன் மின்னஞ்சல் பதிலில் தெரிவித்திருப்பதாக 'தமிழ் கார்டியன்' செய்தியில் கூறப்பட்டுள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.05.2024இல் வெளியிடப்பெற்றது